# DISTRICT HISTORY

# NORTH ARCOT

## ஜில்லா சரித்திரம்

## வட ஆற்காடு

சென்னை ஆர்க்கியலாஜிகல் இலாகா

P. V. ஜகதீச ஐயரால்

எழுதப்பட்டு

சென்னை சட்டசபைத் தலைவர்

கனம் திவான்பகதூர் L. D. சுவாமிக்கண்ணு பிள்ளை

அவர்கள் முகவுரையுடன்

கூடியது

[படங்களுடன்]

சென்னை :

ஸி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ்

1926

All rights reserved] [விலை 5 அணா

PRINTED AT
THE "CAXTON PRESS"
MADRAS.

# FOREWORD

I cannot commend too highly the educational value of this series of *gazetteers* in Tamil. I have been long wishing that the people of every town and village should have ready to hand a complete guide to objects of local interest and particularly to local antiquarian remains; and this series by a competent archæologist like Mr. P. V. Jagadisa Aiyar will go far to fulfil this desideratum.

*Fort St. George,*
19-10-1924.

L. D. SAWMIKANNU

# AUTHOR'S PREFACE

Love for one's own country and institutions is a virtue highly essential in all its citizens for its prosperity and well-being. Every attempt should be made therefore to cherish and cultivate this virtue by *one and all.* The study of the history of one's own country in general, and one's own district in particular, should perforce bring about the desired result in this direction. Here we may refer to the statement in the *Report of the fifteenth Provincial Educational Conference* of 1923.

> 'It is one of the fundamental principles of pedagogy that the History and Geography to be taught to the young should start with and be based on the study of the History and Geography of the district or region in which the pupil lives and be correlated to his actual daily experience.'

It is the study of the History of our ancient times and ancient rulers that should rouse in our youths a feeling of reverence and esteem for our ancient rulers and their works and institutions.

Our youths, nay our countrymen and countrywomen too, seem to be under the impression that our land, unlike others, cannot boast of a history from the records of our rulers and historians. This is perhaps due to the fact that books on the history of our land put into their hands are those containing materials culled by foreigners. Here we may point out the fact that in our country historical facts and events of ancient days and

ancient rulers have been carefully preserved *imperishably* and *unalterably* in Epigraphical records on temple walls, copper-plate grants and so on.


Our present Government have collected and published in the *Gazetteers* of the districts and the *Reports of the Epigraphical* and *Archæological departments* a good deal of valuable historical information relating to each district, especially of ancient days and ancient rulers. From out of the facts based on these research works, a series of booklets containing summaries of historical events and other particulars of the various districts, is issued in vernaculars, for the use of our school-going boys and girls and this volume is one of them.

The plan adopted in compiling these booklets is that of giving particulars relating to the situation, people etc., of each district in the general introduction, the political history proper from the beginning up to the occupation by the British in chapter I, and the Gazetteer relating to the historically important places in chapter II. In the case of the Madras district alone, the history relating to the acquisition by the English of the various parts of the presidency is given in the introduction, the history of the city together with the founding of Fort St. George in chapter I, and the various institutions useful to the people, maintained by Government and by private bodies in chapter II.

June 23, 1924 P. V. JAGADISA AYYAR

# பொருளடக்கம்


| எண் | விஷயம் | பக்கம் |
|---|---|---|
| | பூர்வபீடிகை - - - - | - 1 |
| I. | தேச சரித்திரம் - - - | - 20 |
| II. | விசேஷ இடங்கள் - - - | - 39 |



வட ஆற்காடு ஜில்லா
அளவு (ஸ்கேல்)
குடியாத்தம்
பாலாறு
கங்குந்தி
குப்பம்
ஜமீன்
ஆம்பூர்
வாணியம்பாடி
ஜோலார்பேட்டை
திருப்பத்தூர்
செங்கம்
தென்

# வட ஆற்காடு ஜில்லா

## பூர்வ பீடிகை

(அமைப்பு முதலிய விவரங்கள்)

சென்னை ராஜதானியின் ஜில்லாக்களுள் ஒன்றாகிய வட ஆற்காடு ஜில்லா (படம் 1) 4,954-சதுர மைல் விஸ்தீரணம் வாய்ந்துள்ளது. இதற்கு வடக்கில் சித்தூர் ஜில்லாவும் மைசூர் ராஜ்யமும் எல்லையாக ஏற்பட்டிருக்கின்றன. கிழக்கிலுள்ளது செங்கற்பட்டு ஜில்லா. இதன் தென் பக்கத்திய எல்லைகள் தென் ஆற்காடு ஜில்லாவும், சேலம் ஜில்லாவின் ஒரு பாகமும். மேற்கிலுள்ள எல்லை சேலம் ஜில்லாவும், மைசூர் ராச்சியமும், இதன் எல்லைக்கரை ஓரம் நன்கு ஒழுங்கு வாய்ந்திருக்கவில்லை. மேற்கில் மைசூர்ப் பீட பூமியின் ஒரு பாகம் அடங்கியுள்ளதாக விருக்கிறது.

இப்பொழுது இந்த ஜில்லா ஒன்பது தாலூகாக்களாக பிரிக்கப்பட்டிருக்கிறது. அவையாவன :—

(1) வேலூர்
(2) திருப்பத்தூர்
(3) குடியாத்தம்
(4) வாலாஜாபேட்டை
(5) அரக்கோணம்
(6) செய்யாறு
(7) வந்தவாசி
(8) போளூர்
(9) திருவண்ணாமலை

இந்த ஜில்லாவில் 2,397-கிராமங்கள் இருப்பதுடன் 20,55,594 ஜனங்க ளிருந்து வருகிறார்கள்.

பெரும்பாலும் இது மலைப் பிராந்தியங்களுள்ள ஜில்லாவே. இதில் அனேக அழகிய காட்சிகளும் உண்டு. மேற்கு வடக்கு பாகங்கள் குன்றடர்ந்த அழகிய பிராந்தியங்கள். கிழற்குத் தெற்கு பாகங்களோ தட்டையாயும் அழகின்றியும் இருக்கக் காணலாம். பூமி ஸார முள்ளது. நன்கு பயிர் செய்யப்பட்டும் வருகிறது. பெரும்பாகம் வெறும் குன்றுகளடர்ந்திருப்பினும், இயற்கை யமைப்புப் பள்ளத் தாக்குகள் அனேக விடங்களில் அணைகள் கட்டி ஜலத்தைத் தேங்கச் செய்து ஏரி குளங்கள் உண்டுபண்ணிக் கொள்ள அனுகூல முள்ளதாக ஏற்பட்டிருக்கிறது. குன்றுகளில் பொழியும் மழை விழுந்த விடங்களில் பூமியில் சுவறிப் போகாமல் அருவிகளாக ஓடி ஏரி, குளங்களில் விழுந்து அவைகளை நிரப்புகின்றது. ஆதலால் இந்த ஜில்லாவின் சமவெளிப் பிராந்தியங்கள் நீர் வளம் பொருந்தியவை. சென்னை ராஜதானி ஜில்லாக்களுள் ஏரிகள் அதிகம் வாய்ந்துள்ள ஜில்லாக்களுள் ஒன்று வட ஆற்காடு ஜில்லா. இந்த ஜலத் தேக்கங்கள் ஏரிகளென்றும் சில விடங்களில் குளங்கள் என்றும் கூறப்படுகின்றன. காவேரிப்பாக்கம், மாமண்டூர் இவ்விடங்களிலுள்ள ஏரிகளில் எப்பொழுதும் ஜலம் இருந்து கொண்டே யிருக்கும். விஸ்தீரணத்தில் அவைகள் ஏழெட்டுச் சதுர மைலுள்ளவை.

கர்நாடக நவாப்புக்கள் அதிகாரம் நடத்திய ஊர் இப்பொழுது ஆற்காடு என்றழைக்கப்பட்டு வருகிறது.

முதல் முதல் ஆற்காடு என்ற பெயர் பாலாற்றிற்கு இரு பக்கங்களிலுள்ள விசாலமான பிராந்தியங்களுக்கே அளிக்கப்பட்டிருந்ததாம். ஆற்காடு என்ற பதம் வடமொழியில் "ஷடாரணியம்" எனப்படும். ஆறுகாடு ஆற்காடாய் விட்டது. பண்டைக்காலத்தில் பாலாற்றின் இருபக்கங்களிலுமுள்ள பிராந்தியங்கள் ஆறு காடுகள் அடங்கியுள்ளவைகளாக இருந்ததாகவும் அவைகளில் ஆறு ரிஷிகள் தவம் செய்து கொண்டிருந்த தாகவும் கூறப்பட்டுளது.

இந்த ஜில்லாவின் எந்த கிராமத்தை எடுத்துக்கொண்டாலும், எந்த நதியை எடுத்துக்கொண்டாலும், அதைப்பற்றிய புராண சம்பந்தமான கதை ஏற்பட்டிராம லிராது. ஒன்றின் அருகிலிருந்த ஒரு ரிஷியின் பிரதாபமானது கூறப்பட்டிருக்கும், அல்லது பாண்டவர்களது சம்பந்தமாவது அவ்விடங்களுக்கு ஏற்பட்டிருக்கும். ராம. லக்ஷ்மணர்கள் சீதா பிராட்டியைத் தேடித்திரிசையில் வந்து சேர்ந்துள்ள விடங்களெனச் சில உண்டு. ஒரே விதமான ஸம்பவம் வெவ்வே றிடங்களில் நேர்ந்திருந்த தெப்படியென்று நிர்ணயிக்க முடியவில்லை. ஆனல் புராணக் கதைகளிலிருந்து ஒரு விஷயம் நிச்சயமாய் நிர்ணயிக்கப்படுவது ஒவ்வொரு கதையுமே. இப்பொழுது இந்த ஜில்லா ஏற்பட்டிருக்கும் பிராந்தியம் அப்பொழுது காட்டடர்ந்து ராக்ஷஸர்கள் முதலானோர்கள் வசித்துவந்த விஷயத்தை ஒத்துக்கொண்டு எடுத்துக்கூறி யிருக்கிறது போலும். அக்காலத்திய காட்டுவாசிகளான அரக்கர்களை தேவர்கள் நாசப்படுத்தினர்கள் என்றதும் ஏற்பட்டிருக்கக் காணலாம்.

ஆதொண்டை மன்னன் குரும்பர்களை ஜெயித்ததும் இவ்வனப் பிராந்தியங்களில் ரிஷிகள் வசித்துவந்ததையறிந்து காஞ்சீபுரம் முதலான இடங்களில் அனேக கோவில்களைக் கட்டி வைத்தானும். பிறகு கொஞ்சம் கொஞ்சமாக அக்காடுகளில் பெரும்பாகம் அழித்துப் பயிரிட யோக்கியமானதாகச் செய்யப்பட்டது. இறுதியில் ஷடாரணியம் அல்லது ஆறுகாடென்ற அவ்வனப் பிராந்தியத்தின் பெயர் கர்நாடகத்தின் ராஜதானி நகருக் கிடப்பட்டது.

ஜில்லாவின் வடக்கு பாகம் வட ஆற்காடென்று கூறப்பட்டது. 1810-வது வருஷத்தில் கர்நாடகத்துடன் கம்பெனியாருக்குக் கொடுக்கப்பட்ட பாகம் பாலாற்றிற்கு வடக்கிலிருந்த பாகம் மாத்திரமே. அப்பாகம் "வடசுபா" எனப்பட்டு வந்தது. பாலாற்றிற்குத் தெற்கிலுள்ள சுபாவின் பாகம் முதலில் ஆற்காட்டின் தென் பாகமென்று ஏற்பட்டது. இந்த ஜில்லாவின் பாகங்கள் அடிக்கடி மாறுபட்டுக் கொண்டு வந்தனவாம். இங்கிலீஷ் கம்பெனியார்களுக்குக் கொடுக்கப்பட்ட பிறகு வட பாகத்துடன் காளஹஸ்தி, கார்வேட்நகரம், வெங்கடகிரி, செய்தாபூர், கங்குந்தி முதலிய ஜமீன்தாரிகளும், பாரமஹாலிலிருந்து கிருஷ்ணகிரி என்ற பாகமும் மலைத் தொடர்ச்சிக்கு மேலாகவுள்ள ஹோசூரும் சேர்த்துக்கொள்ளப் பட்டன. 1808-வது வருஷத்தில் வெங்கடகிரி, சைதாப்பூர் முதலிய இடங்களும் காளஹஸ்தியின் ஒரு பாகமும் நெல்லூருக்கு மாற்றிக்கொள்ளப் பட்டுக் கங்குந்தி ஜமீன்தாரி, தற்காலத்திய பழமானேரி தாலூகா இவை நீங்கலாகக் கிருஷ்ணகிரிப் பிரிவுகள் சேலத்துடன் சேர்த்துக்கொண்டு விடப்

பட்டன. பாலாற்றிற்குத் தெற்காகவுள்ள ஐந்து தாலூகாக்களும், ஆரணி ஜாகீரும் ஆற்காட்டின் தெற்கிலிருந்து வட பகுதிக்குச் சேர்த்துக் கொள்ளப்பட்டது. சத்தியவேடு தாலூகாவும் பழவேற்காடு பகுதியும் செங்கற்பட்டிலிருந்து எடுத்துக்கொள்ளப் பட்டன. பிறகு இந்த ஜில்லா (1) சித்தூர் (2) திருப்பதி (3) கடப்பநத்தம் (4) சாத்கூர் (5) திருவலம் (6) காவேரிப்பாக்கம் (7) சோளிங்கபுரம் (8) ஆற்காடு (9) வேலூர் (10) திருப்பத்தூர் (11) போளூர் (12) வந்தவாசி (13) ஸத்தியவேடு (14) சித்தூர் பாளையம் (15) மாமண்டூர் (16) கிருஷ்ணபுரம் (17) கரகம்பாடி, (18) ஆரணி, ஆவல்கொண்டா, தேகூர் ஜமீன்தாரிகள் (19) காளஹஸ்தி, கார்வேட்நகரம், கங்குந்தி ஜமீன்தாரிகளென பிரிக்கப்பட் டிருந்தன. பின்னர் 1911-ம் வருஷத்தில் இவை சித்தூர், வட ஆற்காடு இரண்டு ஜில்லாக்களாகப் பிரிக்கப் பட்டன.

பழவேற்காடு 1818-வது வருஷத்தில் கம்பெனிக்காரர்களால் டச்சுக்காரர்களுக்குக் கொடுக்கப்பட்ட போதிலும் மறுபடியும் அவர்களுக்கே திருப்பித் தரப்பட்டுப் பின்னர் செங்கற்பட்டு ஜில்லாவுடன் சேர்த்துக் கொள்ளப் பட்டது. 1824-வது வருஷத்தில் வட ஆற்காட்டுக்குத் திருப்பப்பட்டு 1850-வது வருஷத்தில் சத்தியவேடு தாலூகாவின் ஒரு பாகத்துடன் திரும்பவும் செங்கற்பட்டுக்கே மாற்றி விடப்பட்டது. சத்தியவேட்டின் பாகமும் அதே ஜில்லாவுக்கு 1860-வது வருஷத்தில் தாலூகாக்கள் ஒழுங்கு செய்யப்பட்ட பொழுது சேர்த்துக் கொள்ளப் பட்டது. இதற்கு முன் புங்கனூர் ஜமீன்தாரியும் 1856-வது வருஷத்

தில் கடப்பையிலிருந்து வட ஆற்காட்டுக்கு மாற்றப் பட்டது. ஆவல்கொண்டா, தேசூர் ஜமீன்தாரிகள் முறையே 1848, 1826 இவ்வருஷங்களில் திரும்பவும் நிர்ணயித்துக் கொள்ளப்பட்டன. மாமண்டூர், கிருஷ்ணபுரம் பாளையங்கள் மறுபடியும் ஏற்பட்டது சுமார் 1826-ல். தற்காலத்திலுள்ள வட ஆற்காடு ஜில்லாவிலுள்ளது கங்குந்தி ஜமீனும் ஆரணி ஜாகீருமே, மற்றவைகள் சித்தூர் ஜில்லாவுடன் சேர்ந்து விட்டன.

1860-வது வருஷத்தில் இந்த ஜில்லாவின் தாலூகாக்கள் ஒன்பதாக வரையறுத்து ஏற்படுத்தப் பட்டன. அத்தாலூகாக்கள்: (1) சந்திரகிரி (2) சித்தூர் (3) பழமானேரி (4) வாலாஜா (5) குடியாத்தம் (6) வேலூர் (7) போளூர் (8) வந்தவாசி (9) ஆற்காடு.

இந்த ஜில்லாவிலுள்ள மலைகள் கிழக்குத் தொடர்ச்சி மலைகளே. இவைகள் இந்த ஜில்லாவின் தென்மேற்கிலுள்ள கங்குந்தி ஜமீன்தாரியில் பிரவேசித்து வடக்கு நோக்கிச்சென்று கொஞ்ச கொஞ்சமாய்ச் சித்தூர் ஜில்லாவைச்சேர்ந்த திருப்பதிக் குன்றுகள் வரை கிழக்கு நோக்கி சென்றிருக்கின்றன. இங்கு இம்மலைத் தொடர்ச்சி கரகம்பாடி, மாமண்டூர் கிராமங்கள் வழியாக வடக்கு நோக்கிக் கடப்பை ஜில்லாவில் போகும் ஒரு நீண்ட பள்ளத் தாக்கினால் பிளக்கப்பட்டிருப்பது காணப்படும். இந்த மலைத் தொடரில் ஏற்பட்டுள்ள இடைவெளியின் வழியாகத்தான் கடப்பை ஜில்லாவிற்குள் சென்னை இருப்புப் பாதையின் வடமேற்குக் கிளை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. மாமண்டூர் பள்ளத் தாக்கின் கிழக்கில் மலைத்தொடர்ச்சி மறுபடியும்

கிளம்பிச் சித்தூர் ஜில்லா காளஹஸ்தி ஜமீன்தாரியிலிருந்து நெல்லூரில் பிரவேசிக்கும் வரை வட கிழக்காகச் செல்கிறது. இத் தொடர்ச்சி தான் இரு கர்நாடகங்களெனப் படும். "பாலாகாட்" அல்லது மைசூர் பீடபூமி என்ற பாகத்தையும் "பயன்காட்" அல்லது சுத்த நாடு என்ற பாகத்தையும் பிரிக்கிறதாம். இந்த வட ஆற்காடு ஜில்லாவின் இந்த பாகம் சமுத்திர மட்டத்திற்கு 2,500-அடி உயரமுள்ளது. பூமி இங்கு செழுமையானதெனினும் காயலா ஸ்தலமென்று ஏற்படுவதால அதிக ஜன நெருக்கம் இல்லை. கீழே உள்ள தாலூகாக்களிலிருந்து மேலாக உள்ள தாலூகாகளுக்குப் போக அனேகம் மலைக் கணவாய்களிருந்தாலும் வண்டிகள் போகக்கூடியவை கல்லூர், மொகிலி, செய்னகுந்தா இந்த மூன்று கணவாய்களே.

சந்திரகிரி தாலூக்காவிலுள்ள கல்லூர் கணவாய் கல்லூர் பாளையத்தின் வழியாகக் கடப்பைப் பியலூர்த் தாலூகாவிற்கு தாமல்செருவு பள்ளத்தாக்கை ஒட்டிச் சென்றிருக்கிறது. அதன் வழியாகச் சென்னையிலிருந்து கடப்பைக்குப் போகும் பிரதான ரஸ்தா செல்கிறது. இதன் வழியாகப் போக்கு வரவு மிக அதிகம். ஆயினும் பக்கத்திய ஜில்லாக்களுள் சாமான்கள் கொண்டு போக இருப்புப்பாதை ஏற்படுமுன் ஏற்பட்டிருந்த போக்கு வரவு இப்பொழுதில்லை. செய்னகுந்தாக் கணவாய் குடியாத்தம் தாலூகாவிலிருந்து பழமானேரிக்குச் செல்கிறது. அங்கு அது மொகிலியிலிருந்து வரும் ரஸ்தாவுடன் சேர்கிறது. பாதை செங்குத்தானதே யெனினும் அழகிய காட்சி வாய்ந்துள்ளது.

வட ஆற்காடு ஜில்லாவில் மிகவும் விசாலமானது கிழக்குத் தொடர்ச்சிமலையே யெனினும் மிகவும் உன்னதமானது ஜவ்வாதுக் குன்றுகளே. அவைகளின் சிகரங்களில் சில 3000-அடி உயரம்கூட உயர்ந்துள்ளன. இக்குன்றுகள் இந்த ஜில்லாவின் தென் மேற்கி லிருக்கின்றன. இவைகள் கிழக்கு மலைத் தொடர்ச்சியிலிருந்து அகன்ற வாணியம்பாடிப் பள்ளத்தாக்கினல் பிரிக்கப்பட் டிருக்கின்றன. இந்த வாணியம்பாடிப் பள்ளத்தாக்கு ஆம்பூருக் கருகில் குறுகிப் போகிறது. அங்கு ஜவ்வாது மலைத் தொடரும் அனேகமாய் ஒன்று சேர்ந்தது போல் ஏற்பட்டு விடுகின்றன. பிறகு அது ஜில்லாவை விடுகையில் பெரிதாகி சேலம் ஜில்லாவிற்குட் செல்கிறது. முன் சேலம் ஜில்லாவிற்குச் சேர்ந்திருந்த ஜவ்வாதுத் தொடரின் ஒரு பாகம் 1885-வது வருஷத்தில் வட ஆற்காடு ஜில்லாவுக்கு மாற்றிவிடப் பட்டது. இந்த ஜவ்வாதுக் குன்றுகள் தேக ஆரோக்கியம் வாய்ந்துள்ளவைகள் அல்ல. இவைகளின் தொடர்ச்சி வட கிழக்காக வேலூர் வரைக்கும் சென்றிருக்கிறது. இங்குள்ள 2,743-அடி உயரம் வாய்ந்துள்ள "கைலாஸ துர்க்கம்" என்ற இடம் ஒரு பிரிந்துள்ள சிகரம் இது வேலூருக்கு ஆறுமைல் தூரத்தில் உள்ளது. இதன் உச்சியில் ஒரு சிறிய பங்களா அமைக்கப்பட் டிருக்கிறது. கோடைகாலங்களில் அங்கு சென்றிருந்தால் இன்பமாக விருக்கும்.

இந்த ஜவ்வாது மலைகளில் நேர்த்தியான காடுகள் ஏற்பட் டிருக்கின்றன. ஆனல் தென் மேற்கு இருப்புப்பாதை போடப்பட்ட காலத்தில் உபயோகப்படுத்திக் கொள்ள

ஏராளமான மரங்கள் வெட்டி விடப்பட்டதால் அக்காடுக ளெல்லாம் முற்றிலும் அழிந்து போயின, இப்பொழுது உள்ள மரங்கள் மிக்க ஜாக்கிரதையுடன் காப்பாற்றி வரப் பட்டு வருகின்றன.

தென் கிழக்குத் தாலூகாக்களின் சம வெளியான அமைப்பு பாலாற்றிற்கு வடக்கில் கொஞ்சதூரம் வரை சென்றிருக்கக் காணலாம். கிழக்குத் தொடர்ச்சிமலையின் பக்கத்துச் சிறுமலைத் தொடர்கள் சித்தூர் ஜில்லாவின் வழியாக வாலாஜாவுக்கு வடக்கிலும் கார்வேட்நகர ஜமீன்தாருக்கு மேற்கிலும் சென்றிருக்கின்றன. இந்தக் கார்வேட்நகர ஜமீன்தாரியின் வழியாக ஒரு விசாலமான செழுமை பொருந்திய பள்ளத்தாக்கு சென்றிருக்கிறது. இது கிழக்குப் பக்கத்தில் காளஹஸ்தி ஜமீன்தாரிக்குள் வடக்கு நோக்கி சுமார் நாற்பது மைல்கள் சென்றிருக்கும் நகரிக் குன்றுகளால் அடைக்கப்பட்டிருக்கிறது. மூங்கில் காடுகள் முதலானவைகளுடன் பசுமையாகக் காணப்படும் சரிவுகளுடன் கூடிய இத்தொடர்ச்சியே இந்த ஜில்லா விலேயே அழகிய தோற்றம் வாய்ந்துள்ளது. மேலும், மற்றைய குன்றுகளுக்குள் முக்கியமானது 2,000அடி- உயரமுள்ள திருவண்ணாமலைக் குன்றே. இது இந்த ஜில்லா வின் தெற்கு பாகத்திலுள்ளது.

இந்த வட ஆற்காடு ஜில்லாவின் நதிகள் உற்பத்தி யாகி ஓடும் மாதிரி ஒழுங்கற்றிருத்தலுக்குக் காரணம் இது குன்றடர்ந்திருப்பதே. வட பாகம் மேற்கிலும் வடக்கிலும் கிழக்குத்தொடர்ச்சி மலையாலும் கிழக்கில் கார்வேட்நகரக் குன்றுகளாலும் தடைகள் ஏற்பட்டிருக்கும் காரணம்பற்றி

நீர் ஓட்டம் தெற்குப் பக்கமாக ஏற்பட்டிருப்பதுடன் அது பாலாற்றில் வந்து கலக்கிறது. மேற்கு பீடபூமியின் ஜலமும் தெற்குப் பக்கத்தில் தான் செல்கிறது. தெற்குத் தாலூகாக்கள் சிறுகச் சிறுக சமுத்திரத்தின் பக்கம் சரிந்து சென்றிருப்பதால் அதிலுள்ள நதிகள் அப்பக்கமே ஓடி சமுத்திரத்தில் விழுகின்றன.

இந்த ஜில்லாவின் முக்கியமான நதிகள் (1) பாலாறு (2) செய்யாறு (3) கோட்டாறு (4) கௌண்டின்ய நதி (5) புண்ணியதீர்த்த நதி முதலியன.

இந்நதிகளுள் முக்கியமானது பாலாறு. அது இந்த ஜில்லாவை அனேகமாய் இரண்டு சம பாகங்களாகப் பிரிக்கிறது. அது மைசூரில் நந்திதுர்க்கத்திற்கருகில் பெண்ணாறு உற்பத்தியாகுமிடத்திற்குப் பக்கத்திலேயே உற்பத்தியாகிறது. உற்பத்தியான இடத்திற்கு ஐம்பது மைல் தூரத்தில் இந்நதி கங்குந்தி ஜமீன்தாரியில் இந்த வட ஆற்காடு ஜில்லாவில் பிரவேசிக்கிறது. இன்னும் முப்பது மைல் சென்றதும் கிழக்குத் தொடர்ச்சியிலுள்ள இடைவெளிகளின் வழியாக வாணியம்பாடி பள்ளத்தாக்கில் விழுகிறது.

வசிட்ட மகரிஷி நந்தி மலையில் தவம் செய்துகொண்டிருக்கையில் அவருக்கு உதவிசெய்து கொண்டிருந்த காமதேனுவின் விருப்பத்தைப் பூர்த்திசெய்து வைக்கவேண்டி ஒரு தருப்பையை மந்திரித்துவிட அது இளங்கன்றாக மாறிவிட உடனே காமதேனு அவ்விளங்கன்றினுக்குப் பால் கொடுக்க வேண்டித் தனது முலைப்பாலை அம் மலையில் சொரிய அது ஒரு புண்ணிய நதியாய்ப் பெருகிப் பாலாறு என்னும் பெயரோடு சென்றதையும், பின்னர் இப்பாலாறு

கோடை காலத்திலும் பயிர் உழவர்களுக்கு ஊற்று நீர் பிருதியால் உதவிபுரிவதையும் பெரியபுராணம் கூறுகிறது.

துங்க மாதவன் சுரபியின் திருமுலை சோரிபால்
பொங்கு தீர்த்தமாய் நந்திமால்வரை மிசைப் போந்தே
அங்க ணித்திலஞ் சந்தன மகிலொடு மணிகள்
பங்கயத்தட நிரைப்பவந் திழிவது பாலி.

* * *

பிள்ளை தைவரப் பெருகுபால் சொரி முலைத்தாய்போல்
மள்ளர் வேனிலின் மணிற்றிடர் பிசைந்து கைவருட
வெள்ள நீரிரு மருங்குகால் வழி மிதந்தேறிப்
பள்ள நீள்வயற் பருமடை யுடைப்பது பாலி.

இந்தப் பாலி எனப்படும் பாலாற்றைப்பற்றி கந்த-புராணத்தில் :—

வாலிதாகிய குணத்தினன் வசிட்ட னென்றுரைக்குஞ்
சீலமாமுனி படைத்ததோர் தேனுவின் றீம்பால்
சால நீடியே தொல்லைநாட் படர்ந்திடு தன்மைப்
பாலி மாநதிப் பெருமையான் பகர்வதற் கெளிதோ ?

என்றும், காஞ்சிபுராணத்தில் :—

மழையெலாங்கொழுமிச் சொரிமான்பெண்வோகையாற்
கழிய நீண்முலைத் தாரைகள் கான்றன கான்றபான்
முழுதுமோர் நதியாய வணின்று முந்நீர் புகுந்
தழுவிலும் பருமாட்டயர் தீர்த்த மாயதே.

என்றும் பாடப்பட்டிருக்கிறது.

பாலாற்றின் இன்னொரு முக்கியமான உபநதி பெண்ணை என்ற நதி. அது சந்திரகிரியின் மேற்கிலுள்ள பாறைக் குன்றுகளில் உற்பத்தியாகிறது. அதன் ஓட்டம் அனேகமாய் நேர் கிழக்கே, கிழக்குத் தொடர்ச்சி மலைகளிலிருந்து வரும் அனேக சிற்றாறுகளின் ஜலத்தைப்பெற்றுக்

கொண்டு ஆற்காட்டிற் கருகில் அந்த பாலாற்றில் வந்து கலக்கிறது. இதைத்தவிர்த்துப் பாலாற்றிற்குக் கோட்டாறு, கௌண்டின்னிய நதி என்ற சிறு உபநதிகளுமிருக்கின்றன. இவைகளும் பெண்ணை நதியைப் போலவே ஓடிச் சென்று முறையே ஆம்பூர், குடியாத்தம் என்ற இடங்களில் பாலாற்றுடன் கலக்கின்றன.

பாலாற்றிற்கு அடுத்த முக்கியமான நதி செய்யாறு. இது ஜவ்வாது மலையில் உற்பத்தியாகி முதலில் தெற்குப் பக்கமாகத் தென் ஆற்காடு ஜில்லாவிற்குள் ஓடுகிறது. மேட்டுப் பிராந்தியங்களைக் கடந்ததும் கிழக்கு நோக்கி வளைந்து ஜில்லாவின் தெற்குத் தாலூகாக்களின் வழியாக ஓடிச் செங்கற்பட்டு ஜில்லாவில் வாலாஜாபாத்திற் கருகில் பாலாறுடன் கலக்கிறது.

பாலாறு, செய்யாறு, பெண்ணை இந்த நதிகளுக்கு நல்ல பாலம், கலுங்குகள் ஏற்பட்டு அனேக ஏரி குளங்கள் ஜலம் நிரப்பப்பட்டு வருகின்றன. மற்றச் சிற்றாறுகளில் ஏற்பட்டுள்ள சிறிய கலுங்குகள் முதலியன பழைய காலத்திய வேலைகளே. இந்த ஜில்லாவின் கிழக்கு பாகத்திய ஜலம் நாராயணவனம், கொறட்டையாறு இந்நதிகளில் வந்து விழுகிறது. நாராயணவனம் என்ற நதி நகரிக்குன்றுகளுக்கு மேற்கிலுள்ள வண்டல் மண் பள்ளத்தாக்கில் உற்பத்தியாகி மலைத்தொடர்ச்சியி லுள்ள ஒரு இடை வெளி வழியாக ஓடி, அதைக்கடந்து சென்று கிழக்குத் திசையை நோக்கிப் பழைய நாராயணவனம் என்ற ஊரைத்தாண்டிப் போகிறது. கொறட்டையாறு பாலாற்றிற் கருகில் ஆற்காட்டிற்குக் கிழக்கில் ஆறு மைல் தூரத்தில் உற்பத்தியா

கிப் பாலாற்றிலிருந்தும் ஜலத்தைப்பெறும் காவேரிப்பாக்கத்தின் குளத்தின் அதிகமான ஜலத்தைக்கொண்டு ஆரம்பித்து ஓடுகிறது. வட கிழக்காக ஓடித் திருத்தணி நகரி நதிகளின் ஜலத்தைப் பெற்றுக்கொண்டு என்னூருக் கருகில் சமுத்திர சங்கம மாகிறது.

இந்த நதிகள் ஆதியில் ஓடிக்கொண்டிருந்த மார்க்கம் மாறி யிருந்தல் வேண்டும். பாலாறோ அல்லது அதன் ஒரு பெரிய கிளை நதியோ முன் கொறட்டையாற்றுப் பள்ளத்தாக்கின் வழியாகச்சென்றிருக்கவேண்டும். இப்பொழுதும் பாலாறு, கொறட்டையாறு இந்த நதிகளை விருத்தக்ஷீர நதியென்ற சிறிய நதி சேர்த்திருப்பது காணப்படும். இதே மாதிரியே நகரி நதியும் முந்தி நாகலாபுரத்திற் கருகில் நாராயணவனத்துடன் கலந்திருந்தது. அரை மைல் நீளமுள்ள கால்வாய் வெட்டித் திருப்பப்பட்டிருக்கும் அடையாளம் ஏற்பட்டிருக்கிறது. இது இந் நகரிநதி கொறட்டையாறுடன் கலக்கும் திருத்தணி நதியில் வந்து கலக்கும்படிச் செய்த ஏற்பாடு போலும். பாலாறும் மனித யத்தனத்தினுல் அது ஓடின மார்க்கம் திருப்பப் பட்டதாகக் கூறப்பட்டுளது. காஞ்சீபுரத் தரசர்களுள் ஒருவரது ஊழியராகிய குண்ட கோபால ராவ் என்ற ஒருவர் இந்த நதி முழுவதும் அந்த ராஜதானிக் கருகில் ஓடும்படி செய்ய அணை கட்டித் திருப்பினுராம். காவேரிப்பாக்கத்திற் கருகிலுள்ள கொண்டாபுரத்தில் கோவில் சுவரின் சிலாலிகிதத்தில் அது இருப்பது பாலாற்றிற்குத் தெற்கி லென்று கூறப்பட்டிருக்கிறது. ஆனுல் இப்பொழுது அது இருப்பது அந் நதிக்கு வடக்கிலேயே.

அனேகமாய் வருஷத்தில் பெரும்பாகம் இந்நதிகள் வரண்டு கிடக்கக் காணலாம். மழை காலங்களில் பெரிய வெள்ளம் ஏற்பட்டு இவைகள் அதிவேகத்துடன் ஓடும் பொழுது இவைகளைக் கடக்கமுடியாத காட்டாறுகளாகவே காணலாம். ஆனால் இந்த வெள்ளம் நீடித்திராமல் இரண்டொரு தினங்களில் வடிந்துபோகும். எவ்வளவு சீக்கிரத்தில் பெருகுகின்றனவோ அவ்வளவு சீக்கிரமாகவே இவை வடிந்தும் விடுகின்றன. இந்த நதிகளில் ஒரு விசேஷம். இவைகள் அந்தர்வாகினிகள். கீழே நீர் ஓட்டம் வாய்ந்துள்ள நதிகளானதால் 'கஸம்' எனப்படும் கால்வாய்கள் இந்த வரண்ட நதிகளிலிருந்து வெட்டி அவைகளில் ஓடும் ஜலத்தைக்கொண்டு பக்கத்திய நிலங்கள் சாகுபடி செய்யப்படுகின்றன.

சீதோஷ்ண நிலைமையில் இந்த ஜில்லா வரட்சி பொருந்தித் தேக ஆரோக்கியம் வாய்ந்தது. சமவெளிகளில் உஷ்ணம் அதிகமே யெனினும் சகிக்க முடியாத உஷ்ணமல்ல. உயர்ந்த மேற்குப் பிராந்தியங்களில் சீதோஷ்ண நிலைமை ஆரோக்கியமானதாயும் இன்பமானதாயுமிருக்கிறது.

ஏப்ரல் மாதம் முதல் செப்டம்பர் மாதம் வரை பகலில் காற்று தென்மேற்காகவும், இராக் காலங்களில் கிழக்குத் தென்கிழக்காகவும் வீசும். அக்டோபர் மாதம் தொடங்கிக் காற்று வடகிழக்குக்காற்றாக மாறி அங்கிருந்து பருவக்காற்று வீசுவதாக ஏற்படும். அக்டோபர், நவம்பர் மாதங்களில் தான் இங்கு அதிக மழை பொழிகிறது. சிற்சில சமயங்களில் புயல் காற்றும் அடிப்பதுண்டு.

கட்டடங்களுக்கு யோக்கியமான கற்கள் வெட்டியெடுக்கக்கூடிய இடங்களில் முக்கியமானவை :—(1) பள்ளிகொண்டைக் குன்றுகள் (2) வேலூர் (3) வந்தவாசி (4) சேத்துப்பட்டு (5) ராணிப்பேட்டை (6) சோளிங்கபுரம் (7) திருத்தணி முதலான இடங்கள்.

கால் நடைகளைப்பற்றி விசேஷமாகக் கூற இடமில்லை. பல இடங்களில் அனேகம் நெல்லூர் மாடுகள் இருக்கக் காணலாம். ஆனால் அவைகளைக்கொண்டு குடியானவர்கள் கால்நடைகள் விருத்தி செய்வதாக ஏற்படவில்லை. மலைத்தொடர்ச்சிக்கு மேல் நல்ல எருதுகளும் பசுக்களும் உண்டு. எருதுகள் மைசூர் நாட்டைச் சேர்ந்தவை. முக்கியமாய்க் கங்குந்தி என்ற விடத்தில் விர்த்தியாகும் எருதுகளே அவை. பசுக்கள் பால் கறப்பதில் பேர்பெற்ற புங்கனூரி லிருந்து மிகுதியாக விருத்தி செய்யப்படும் சித்தூர் ஜில்லா புங்கனூர்ப் பசுக்களே இந்த ஜில்லாவில் அதிகம். ஆனால் இப்பொழுது அசல் புங்கனூர் மாடுகள் கிடைப்பது அரிது. சாதாரண ஆடுகளும், குரும்பாடுகளும் உண்டு காடுகளில் காட்டுக்கோழியும் ஆறுகளிலும் குளங்களிலும் அனேக விதமான மீன்களும் உண்டு.

இந்த ஜில்லாவில் தமிழ் தெலுங்கு இந்த இரண்டு பாஷைகளும் சமமாகவே பேசப்படுகின்றன. தெற்குத் தாலூகாக்களில் வழங்கப்படும் பாஷை தமிழ் வடக்குத் தாலூகாக்களில் பேசப்படும் பாஷை தெலுங்கு. பாலாறு இவ்விருவகை பாஷைகளைப் பேசும்படி ஜனங்களைப் பிரிக்கிறது. ஆயினும் தெலுங்கர்களுக்குள் தமிழ் கிராமங்களும், தமிழர்களுக்குள் தெலுங்கு கிராமங்களும் காணப்படு

கிறது. பெருன்பான்மையான ஜனங்கள் ஹிந்துக்களே. விஷ்ணு, சிவனைப் பூசிப்பதுடன் சாஸ்தா, மாரியம்மன் இந்த தேவதைகளிடமும் எல்லோருக்கும் பய பக்தி உண்டு. ஹிந்துக்களைத் தவிர இந்த ஜில்லாவில் முகம்மதியர்களும், ஜெயினர்களும், கிறிஸ்தவர்களும் இருக்கிறார்கள். முக்கால் பங்கு ஜனங்கள் அரிசியை உபயோகியாது கம்பு, சோளம், கேழ்வரகு முதலிய விலை சரசமான தானியங்களையே சமைத்து உண்பார்கள்.

இந்த ஜில்லாவிலுள்ள ஜனங்களாவன:—(1) பிராமணர்கள், இவர்களிலும் அனேகம் வகுப்பினர்கள் உண்டு. (2) ஜங்கமலிங்காயத்துக்கள். அதாவது ஓரிடமிருந்து மற்றோரிடம் கொண்டு போகக்கூடிய லிங்கத்தைப் பூசிப்பவர்கள் (3) பண்டாரங்கள் (4) பூசாரிகள் (5) வள்ளுவர்கள் (6) சாத்தாணிகள் (7) தாசிகள் (8) பலிஜர்கள் இவர்கள் தெலுங்கு வர்த்தகர்கள் (9) கவரையர்கள் (10) லிங்கபலிஜயர்கள் (11) கோமுட்டிகள் (12) பேரி செட்டிகள் (13) லப்பைகள் (14) ரஜபுத்திரர்கள் இவர்கள் ஸ்வல்பம் வேலூரில் விசேஷமாய் வசிக்கிறார்கள் (15) வேளாளர்கள் (16) அகமுடியர்கள் (17) மலையாளிகள் முதலானோர்கள்.

ரெட்டிகளும் ஏகாரி முதலான விவசாயம் செய்யும் ஜாதியார்களும் நீர் பாய்ச்சியும், கவலை கொண்டிறைத்தும் நெல், கரும்பு, வெற்றிலை, வாழை, கேழ்வரகு, கம்பு, சோளம், வரகு, மக்காச்சோளம், சாமை, துவரை, அவரை, உளுந்து, பச்சைப்பயறு, காராமணி, கொள்ளு, கடலை, எள்ளு, முத்துக்கொட்டை, வேர்க்கடலை, பருத்தி, அவுரி, கஞ்சா, சணல், புகையிலை, மிளகாய், மஞ்சள் முதலியன பயிர் செய்கிறார்கள்.

மலையாளிகள் என்ற வகுப்பினர்கள் தமிழ் பேசும் மலைவாசிகள். ஜவ்வாது மலையின் மீதுள்ள கிராமங்களிலும், வேலூர், போளூர் தாலூகாக்களிலும் காணப்படுவார்கள். இவர்களைப்பற்றிய விவரம் விசித்திரமானது. கங்குந்தி வேடர்களில் சிலர் காஞ்சீபுரம் காரைக்காட்டு வேளாளர்களுடைய பெண்களைத் தங்களுக்குக் கலியாணம் செய்து கொடுக்கும்படி கேட்டார்களாம். அவ்வேளாளர்கள் அவமதித்துப் பேசித் தங்களது கன்னிகைகளைத் தரமாட்டோம் என்றதால் கோபம் கொண்ட அக்கங்குந்தி வேடர்கள் ஏழு வேளாளப் பெண்களை அபகரித்துக் கொண்டு கங்குந்தி சேர்ந்தார்களாம். அப்படிக் கொண்டு போன பெண்களை விடுவித்துக்கொண்டு வர ஏழு வேளாளர்கள் ஏழு நாய்களுடன் புறப்பட்டார்கள். புறப்படுகையில் அவர்கள் தங்கள் தங்களது மனைவிகளிடம் அவர்களது நாய்கள் தனியாகத் திரும்பி வரக்கண்டால் அவர்கள் கொல்லுண்டார்களெனக் கொண்டு அவர்களது அபரக்கிரியைகளை நிறைவேற்றலாமென்று கூறிவிட்டுச் சென்றார்கள். பாலாற்றண்டை வந்ததும் அதில் வெள்ளம் அதிகரித்திருக்கக் கண்டு அதைக்கடக்க முயலுகையில் நாய்கள் அவர்களை விட்டுப் பிரிந்து கரையேறிக் காஞ்சீபுரத்திற்குத் திரும்பி வந்ததைக்கண்டு அவர்களது மனைவிகள் அவர்களது அபரக்கிரியைகளைச் செய்து முடித்து அவர்களது கைம்பெண்ணுகை ஏற்பட்டுவிட்டார்கள். பிறகு கன்னிகைகளைக் கவர்ந்து சென்ற வேடர்களைக் கொன்று திரும்பி வந்த வேளாளர்கள் அவர்களது மனைவிகளின் செய்கையால் ஜாதியினின்றும் அகற்றப்பட நேர்ந்து அவ்

விடத்திலிருந்தகன்று சிலவேடஜாதிப்பெண்களை மணந்து கொண்டு ஜவ்வாது மலைக்குச் சென்று பயிர் செய்பவர்களாகி இந்த மலையாளிகளுக்கு முன்னோர்களானார்களாம்.

கம்மர்களைப்பற்றியும் ஒரு கதை உளது. ராக்ஷஸர்களது ஹிம்சையைச் சகியாது ரிஷிகள் விஷ்ணுவினிடம் சென்று முறையிட அவர் அவர்களை லக்ஷ்மியைப் போய்க் கேட்கச்சொன்னார். லக்ஷ்மி தேவியும் அந்த ரிஷிகளுக்குத் தனது கம்மல் ஒன்றைக்கொடுத்து அதை ஒரு பெட்டியில் வைத்து நூறு வருஷம் பூஜிக்கும்படி கூறினளாம். ரிஷிகளும் அவ்வாறு செய்ய நூறு வருஷங்களானதும் அக் கம்மல் வைத்திருந்த பெட்டியிலிருந்து ஐநூறு வீரர்கள் உற்பத்தியாகி அரக்கர்களை நாசமாக்கிய பின் விவசாயிகளாக ஏற்பட்டார்களாம்! அம்மரபினர்களே கம்மர்கள் என்ற ஜாதியார்களாம்!!

கொல்லர்கள் என்ற தெலுங்கு ஜாதியார்கள் கால் நடை பாதுகாக்கும் இடையர்கள். ஆதியில் இவர்கள் ஆடு மாடு மேய்த்துப் பால்விற்று ஜீவனம் செய்து வந்தபோதிலும், இப்பொழுது நிலங்களுக்குச் சொந்தக்காரர்களாகிக் குடியானவர்களது தொழிலை அனுசரித்தும் வருகிறார்கள். கால் நடைகள் மேய்க்கும் தமிழர்கள் இடையர்களெனப் படுவார்கள்.

குரும்பர்கள் ஆட்டிடையர்கள், முந்திய தென்னிந்தியாவில் பராக்கிரமம் பொருந்தியிருந்த பல்லவர்கள் மரபினர்கள். இவர்கள் இருப்பது இந்த ஜில்லாவின் உன்னதப் பிரதேசங்களிலும் சித்தூர், குடியாத்தம் இவ்விடங்களிலும், தெற்குத் தாலூகாக்களில் கொஞ்சம் கன்னடியர்க

ளது முன்னோர்கள் ராணுவப் பயிற்சி வாய்ந்திருந்தவர்களெனினும் இப்பொழுது கால் நடைமேய்ப்பவர்கள். தவிரவும் இந்த ஜில்லாவில் கம்மாளர்கள், நெசவு நெய்யும் சாலியர்கள், சேணியர்கள், தேவாங்கர்கள், கைக்கோளர்கள், பட்டுநூல்காரர்கள், சாயம் போடும் ரங்காரிகள் முதலியவர்களும், வாணியர்களும், குசவர்களும், செம்படவர்களும், வண்ணார், அம்பட்டர், சக்கிலிகள், போயர்கள் என்ற வேடர்கள், பறையர்கள், தமிழர்கள் முதலானோர்களும் உண்டு.

---

# அத்தியாயம் 1

## தேச சரித்திரம்

வட ஆற்காடு ஜில்லா திராவிட தேசமென்று வழங்கிய தேசத்தின் ஒரு பாகம். முதல் முதல் எப்பொழுது எந்த ஜனங்கள் இதில் வந்து குடியேறினார்கள் என்ற விஷயம் தெரியவில்லை. இதன் புராதனக்குடிகள் அடர்ந்த காடுகளில் நாகரீகமின்றி வாழ்ந்து வந்திருக்க வேண்டுமென்று தெரிகிறது. அவர்களுக்கு மலைசரர்களென்றும், இன்னும் பலவிதமான பெயர்களும் ஏற்பட்டிருந்ததாகத் தெரிகிறது. அவர்கள் சிலவேளைகளில் நிர்வாணமாகவும் வாழ்ந்திருக்கிறார்கள். அவர்கள் யாதொரு மதத்திற்கும் சேராமலும், யாதொரு அரசனது ஆக்ஷியின்கீழ ஏற்படாமலும், கலியாண சம்பிரதாயம் யாதுமே இல்லாமலும் வேடர்களாயிருந்திருக்கிறார்கள். இந்த ஜில்லாவின் புராதனக் குடிகளைச் சேர்ந்தவர்கள் தான் இப்பொழுதும் காட்டில் வசித்துக் கொண்டு காட்டு விளைபொருள்களைக் கொடுத்து நாட்டுப் பொருள்களை அவைகளுக்காக மாற்றிக் கொண்டு போக வழக்கப்பட்டுள்ள ஏனாதிகள், இருளர்கள் என்ற ஜாதியார்கள் எனக் கூறுகிறார்கள்.

இந்தத் திராவிடம் என்ற பெயருடன் கூடிய பிராந்தியம் மிகச் செழுமையான பூமி என்ற காரணம் பற்றிச் சீக்கிரத்தில் அனேகர் வந்து குடியேறத் தலைப்பட்டார்கள். அவர்கள் முதலில் சமுத்திரக்கரை ஓரங்களிலும், பெரிய நதிகளுக்கருகிலும் தங்கினார்கள். அப்படித் தங்கினவர்களுள் முதல் முக்கியமானவர்கள் குரும்பர்கள். இவர்கள்

மூர்க்க ஸ்வபாவம் வாய்ந்த ஜாதியார்கள். அவர்களது கொடிய குணத்தினுல் தான் அவர்களுக்குக் குறும்பர்க ளென்ற பெயர் கொடுக்கப்பட்டதாம். நாட்டின் விஸ்தார மான சமுத்திரக்கரையைக் கண்டு மற்ற ஜாதியார்களோடு வியாபாரம் செய்ய அது அனுகூலமான தெனத் தீர் மானித்துக் கர்னுடகப் பிராந்தியத்திலிருந்து வந்து இந்த வேடர்களை ஒடுக்கினுர்களாம். முதல் முதல் அவர்களுக்கு யாதொரு அரசனும் ஏற்பட்டிருக்க வில்லை. ஆயினும் பின்னர் அவர்களுக்குள்ளாக சண்டை சச்சரவுகள் நேர்ந்த காரணம் பற்றிக் கொமாண்டு குறும்பப் பிரபு என்ற ஒரு தலைவனைத் தெரிந் தெடுத்துக் கொள்ளும்படி நேர்ந்தது. இவன் தான் பல்லவ வமிசமென்று கூறப்பட்டுள்ள பரம் பரையின் அரசனென்றும் தெரிவிக்கப்பட் டிருக்கிறது. இவன் நாட்டை இருபத்து நான்கு பாகங்களாகப் பிரித்து ஒவ்வொரு பாகத்தை ஒவ்வொரு கோட்டமென்ற பெயரிட் டழைத்தான். இக் கோட்டங்கள் ஒவ்வொன்றிலும் ஒவ் வொரு கோட்டையையும் ஏற்படுத்தினதாகக் கூறப்பட் டுளது. அனைது ராச்சியம் வடக்கில் பழவேற்காட்டி லிருந்து தெற்கில் கூடலூர்வரைக்கும் பரவி யிருந்ததுடன் உள்பக்கத்தில் கிழக்குத் தொடர்ச்சி மலைவரைகூடப் பரவி யிருந்திருக்க வேண்டுமென்று தெரிகிறது. அவர்களது முக் கியமான கோட்டைகளுள் ஒன்று போளூர்த் தாலூகாவி லுள்ள படவேடு. மற்றவை பழைய கோட்டைகளா யிருந் திருக்க வேண்டும். மஹேந்திரவாடி, ஆம்பூர்ப்பேட்டை, நாராயணவரம், வள்ளிமலை முதலிய இடங்களில் கோட் டைகள் ஏற்பட்டிருக்கக் கூடுமென நினைக்கிறுர்கள்.

பல்லவ மன்னர்களைப் பற்றித் தெரிந்திருப்பதெல்லாம் மிகச் சொல்பமே. அவர்களது முக்கியமான துர்க்கம் செங்குன்று (Red Hills) எனப் படுமிடத்தின் அருகிலுள்ள புழலூர் காஞ்சீபுரம் என்ற விடத்தில் ஏற்பட்டு அவ்வூரே அவர்களது ராஜதானி நகரமாகவும் ஏற்பட்டிருந்ததாம். சமுத்திர மார்க்கமாக அயல் நாடுகளுடன் அவர்கள் ஏராளமான வியாபாரம் செய்து வந்திருந்ததாகத் தெரிகிறது. இவ்விஷயமும் சமுத்திரக்கரை யோரங்களில் எங்குமே பல்லவ நாணயங்கள் அகப்படுகின்றன என்றதுடன் ரோமாபுரி (Rome) சீனு (China) தேச நாணயங்களும் அகப்படுவதால் நன்கு ஊர்ஜிதப்படுகிறது. ஒரு ஜெயினமதப் பிரசங்கி இப்பிராந்தியங்களுக்கு வந்து ஜனங்களை அந்த மதத்தைத் தழுவும்படி செய்தனராம். பின்னர் காஞ்சீபுரம் அம்மதத்திற்குப் பேர்போனதாக ஏற்பட்டு அனேக ஜெயின சந்நியாசிகளது இருப்பிடமாக அவ்வூர் இருந்து வந்தது. இப்பொழுதும் அனேக ஜெயினர்கள் தென் ஆற்காடு ஜில்லாவிலும், இந்த ஜில்லாவின் ஆற்காடு, வந்தவாசி, போளுர் தாலூகாக்களிலும் இருந்து வந்தார்களாம். ஏழாவது நூற்றுண்டில் பல்லவ அரசர்களது அதிகாரம் மகா உன்னதமான நிலைமையி லிருந்தது. ஆனுல் கொஞ்சகாலத்திற் கெல்லாம் கொங்கு, சோழமன்னர்கள் அவர்கள்மீது அனேகம் தடவைகளில் வெற்றி பெற்றிருந்ததாகக் கூறப்பட்டுளது. கடைசியாகக் குறும்பர்களை ஒடுக்கியது எட்டு அல்லது ஒன்பதாவது நூற்றுண்டில் சோழர்களே. தஞ்சாவூர் குலோத்துங்க மன்னனது மகன் தொண்டமான் சக்ர

வர்த்தி யென்ற ஆதொண்டை பல்லவ மன்னனை எதிர்த்து அவனுடன் கொடும் போர்புரிந்த விடம் காஞ்சிபுரத்திற்கு 10-மைல் தூரத்திலுள்ள புல்லலூர் என்று கூறப்பட்டுளது. இதில் குரும்பர்கள் வெற்றிபெற ஆதொண்டை சோளங்கி புரத்திற்கு (Sholingur) ஓடிவிட நேர்ந்தது. அங்கு அவன் கண்ட ஒரு சனவினல் தைரியம் கொண்டு மறுபடியும் தனதெதிரியை எதிர்த்து அவனது வீரர்கள் அனைவரையும் கொன்று வெற்றி பெற்றான். பல்லவ மன்னன் சிறை செய்யப்பட்டுப் புழலூர்க் கோட்டையின் பித்தளைக் கதவு தஞ்சாவூர் கோவிலுக்குக் கொண்டு போய்விடப் பட்டது. இவ்வெற்றிக்குப் பிறகு மற்ற குரும்பத்தலைவர்கள் சுளுவில் ஒடுக்கிவிடப்பட்டார்கள். பின் அவ்வமிசமே அழிந்து போயிற்றாம். இப்பொழுது மைசூர் பீடப்பூமிப் பிராந்தியங்களில் காணப்படும் அம்மரபினர்கள் குரும்பர்களென்ற பெயர்வாய்ந்து கால் நடைகள் மேய்த்தும் மட்டமான மோட்டாக் கம்பளங்கள் நெய்தும் ஜீவித்து வருகிறார்கள். மேற்குத்திக்கில் ஓடிப்போன சிலர் சொல்ப நாகரீகம் வாய்ந்துள்ளவர்களாய் நீலகிரி மலைச்சரிவுகளில் வசித்து வருகிறார்கள். ஏனாதிகளும், இருளர்களும் இம்மரபினர்களே யென்பது சிலர் அபிப்பிராயம்.

இப்பொழுது காஞ்சீபுரம் சோழ மன்னர்களது ராஜதானி நகரமாக ஏற்பட்டது. அந்த ராஜதானியும் கோதாவரி வரை பரவியிருந்தது. ஆயினும் சோழர்களது அதிகாரம் மறுபடியும் குன்றி அவர்களது ராச்சியமும் தமிழ் நாடுகளுக்குள்ளேயே ஒடுக்கி விடப்பட்டதாம். அங்கு அவர்கள் தெலிங்கண, விஜயநகர மன்னர்களுடன் விட்டு

விட்டுப் போராடிக்கொண்டு வந்ததும் ஏற்படுகிறது. சோழ மன்னர்கள் அடிக்கடி கப்பம்கட்டும் மன்னர்களது நிலைமைக்கு வந்து விட்டார்களாம். ஏழாவது நூற்றாண்டின் இறுதியில் இவ்வமிசம் முடிவுபெற்று அதன் ஸ்தானத்தில் தற்காலத்திய தஞ்சாவூர் பரம்பரையை ஸ்தாபித்த பிரக்கியாதிபெற்ற மஹா ராஷ்டிர மன்னன் சிவாஜியின் சகோதரன் ஏற்பட்டான்.

சோழ மன்னர்கள் தெற்கு நோக்கித் துரத்தி விடப்பட்டதும் தெலிங்கனாவின் கீழண்டைப்பாகம் யாதவ வமிசத்தினர்களின் (Yadava Dynasty) கீழிருந்து வந்தது. கார்வேட் நகர ஜெமீன்தாரியில் நாராயணவரம் என்ற விடம் அவர்களது ராஜதானி நகரங்களில் ஒன்றாக ஏற்பட்டிருந்ததென்பதையும், அவர்களது நாட்டில் திருப்பதியும், சந்திரகிரியும் முக்கியமான நகரங்களாக இருந்து வந்தன என்பதையும் தவிர்த்து இம்மரபினர்களைப்பற்றி நிச்சயமாகத் தெரியக்கூடியது ஒன்றும் இல்லை. அவர்கள் குரும்பர்களது பரம்பரையைச் சேர்ந்தவர்களாக இருக்கினுமிருக்கலாம். ஏனெனில் அச்சாதியார்களது பெயரிலிருந்து அவர்களது தொழில் கால்நடைகள் மேய்ப்பதென்று தெரிகிறது. பீடபூமி வாசிகளாகிய குறும்பர்களது தொழிலும் கால் நடைகள் மேய்ப்பதே.

சுமார் பதினோராம் நூற்றாண்டில் முன்னுக்கு வந்தது பல்லால வமிசம் (Ballala). இவ்வமிசம் தமிழ் நாடு, கர்நாடகம், மலையாளம், தெலிங்கனாவின் ஒரு பாகம் இவைகளை ஆண்டு வந்திருக்கலாமெனத் தெரிகிறது. அதே காலத்தில் ஆந்திர அரசர்கள் கொஞ்சம் பிரசித்தி பெற்

றிருந்தனராம். ஆனால் அவர்களது ராச்சியம் தற்காலத் திய கர்நாடகம் வரை பரவியிருந்ததென்று கூறமுடியாது. அவர்கள் ராஜதானியின் பிரதான நகரம் ஹைதராபாத் தாக்கு வட கிழக்கில் எண்பது மைல் தூரத்திலுள்ள வாரங் கல் (Warangal). அவர்களும், பெல்லால மன்னர்களும் பதினான்காம் நூற்றாண்டில் முகம்மதியர்களால் ஒடுக்கப் பட்டார்கள்.

இது முதல் தென் இந்திய சரித்திரம் ஒரு வாறு தெளிவு பொருந்தியுளதே. முகம்மதியர்களது படை யெழுச்சியில் முந்தியது 1293-வது வருஷத்தில் ஏற்பட் டது. அப்பொழுது மஹாராஷ்டிர மன்னன் ராமதேவ் (Ramdeva) என்றவனைக் கில்ஜி (Khilji) வமிசத்தைச் சேர்ந்த அலாஉதீன் (Ala-ud-din) என்றவன் எதிர்த்து ஒடுக்கித் தனக்குக் கப்பம் கட்டும்படி செய்தான். தங்க ளது வெற்றிகளால் தைரியம் கொண்ட முகம்மதியர்கள் 1303-வது வருஷத்தில் தெலிங்கனாவைப் படையெடுத்துச் சென்றது பயன் படவில்லை. மூன்று வருஷகாலம் தெற்கு நோக்கி யாதொரு முயற்சியுமே செய்யாமல் இருந்ததைக் கொண்டு அவர்கள் திருப்தியடைந்திருந்தார்களாம். ஆனால் அதற்குப் பிறகு ராமதேவ் கப்பங் கட்டத் தவறிப்போன காரணம்பற்றி ஒரு முகம்மதிய சைனியம் மாலிக்காபர் (Malik Kafur) என்ற தளகர்த்தனின் கீழ் அவனை எதிர்த் துத் திரும்பவும் கீழ்ப்படியும்படி செய்தது. இந்த மாலிக் காபரும் ராமதேவனது ராஜதானியின் பிரதான நகரமா கிய தேவகிரி (Deogiri) யிலிருந்து தெலிங்கனாவின் பிர தான நகரமாகிய வாரங்கலுக்கும் சென்று அதையும் பிடித்

துக்கொண்டு அதன் அரசனையும் கப்பம் கட்டும்படி செய்தான். வெற்றியுடன் கூடிய அவன் இன்னும் தெற்கு நோக்கிச் சென்று மைசூரின் பிரதான நகரமாகவிருந்த துவாரசமுத்திரம் (Dvarasamudra) என்ற விடத்தில் பெல்லாலர்களது சைனியத்தைத் தோற்கடித்துக் கீழ் சமுத்திரக் கரை நெடுகவுள்ள பிராந்தியங்களை ராமேசுவரம்வரைக்கும் ஒடுக்கிவிட்டானும். இவ்வெற்றிகளை அடைந்தபிறகு மாலிக்காபர் வடக்கு நோக்கித் திரும்பிச் சென்று விட்டனன்.

பத்து வருஷங்களுக்குள்ளாக மேற்கூறிய படையெழுச்சியினால் ஏற்பட்டிருந்த மனோபாவம் குறைய ஆரம்பித்துத் தெற்கிலுள்ள ராச்சியங்கள் தங்களுக்கு வெகு தூரத்திற்கப்பாலுள்ள டெல்லி சக்கிரவர்த்திகளுக்குக் கப்பம் கட்டுவதை நிறுத்திவிடத் துணிவுற்றார்கள். இக்காரணம்பற்றியே கயாஸுடின் தக்லாக் (Ghyas-ud-din) 1322-வது வருஷத்தில் தக்காணத்தில் தனக்குக் கீழ்ப்பட்டிருந்த மன்னர்களை பலாத்காரப்படுத்திக் கப்பம் கட்டும்படி செய்ய ஒரு சேனையை அனுப்பவேண்டி நேர்ந்தது. கலகம் செய்தவர்களுள் தலைவனாகவிருந்த வாரங்கல் அரசன் சிறை செய்துகொண்டு போகப்பட்டான்.

தென் இந்தியாவில் அரசாக்ஷி செய்து வந்த பரம்பரைகளுள் விஜயநகர மன்னர்கள் மிகவும் முக்கியமானவர்கள். அவர்களது ஐசுவரியமும், அதிகாரமும், பெருமையும் இப்பொழுது கூட நினைவில் இருந்து வருகின்றன. பெல்லால மன்னர்கள் ஒடுக்கப்பட்டதும் இந்த ராச்சியம் முதலில் தலைக்கிளம்பிற்று. புக்கராயன், ஹரிஹரன் (Bukkaraya and Harihara) என்ற இரண்டு தெலிங்கனு அரச

குமாரர்களால் ஈஸ்வரப்பிரஸாதம் பெற்றுக் கற்றறிந்த மாதவ வித்தியாரணியரால் (Vidyaraniya) உதவி செய்யப்பட்டு அது ஸ்தாபிக்கப்பட்டதெனக் கூறுகிறார்கள். இந்த மாதவ வித்தியாரணியரே அவர்களது பிரதான மந்திரியாகவும் ஏற்பட்டார்.

இந்த வமிசத்திற்குப் பெயர் இடப்பட்டதற்குக் காரண பூதமான ராஜதானியின் பிரதான நகரம் துங்கபத்திரா நதிக்கரையில் விஜய நகரமெனப்படும் ஹம்பி (Hampi)யிலிருந்தது. அங்கிருந்து தான் விஜய நகர அரசர்கள் பதினான்கு, பதினைந்தாம் நூற்றாண்டுகளிலும், பதினாறும் நூற்றாண்டில் சில காலத்திலும் பக்கத்திய மன்னர்களுடன் போராடி ஜெயம்பெற்றனர். 1344-வது வருஷத்தில் முகம்மத் பின்தக்லாக்கின் (Mahammad Tughlak) ஆட்சியில் அவர்கள் தெலிங்கனாவின் மன்னன், பாமினி அரசன் ஹஸன் காங்கூ (Hassan Gangu) இவர்களது உதவிகொண்டு தங்களது நாடுகளிலிருந்தும் முகம்மதியத் துருப்புக்களை அகற்றச் சக்தி வாய்ந்திருந்தார்கள். ஆனால் முகம்மதியர்கள் இழந்துபோன அதிகாரத்தைத் திரும்பவும் அடைய ஸதா முயற்சி செய்துகொண்டுவந்த காரணம் பற்றி அடுத்த இரண்டு நூற்றாண்டுகளில் ஸதா சண்டைகள் ஏற்பட்டிருந்ததாம். விஜயநகர பரம்பரையார்களது ராச்சியம் பதினைந்தாம் நூற்றாண்டு வரைக்கும் அவர்களது ராஜதானிக் கருகிலுள்ள பிராந்தியங்கள் அடங்கியுள்ளதாகவே இருந்தது. பதினான்காவது அரசன் நரசிங்கராயன் காலத்தில் தான் அது கர்நாடகம் வரைக்கும் பரவியிருந்ததாம். தனது முன்னோர்களிடமிருந்து தனக்குக் கிடைத்த

நாடுகளை நரசிங்கராயன் விஸ்தரிக்கச் செய்து வேலூர், சந்திரகிரி இவ்விடங்களிலுள்ள கோட்டைகளைக் கட்டியோ பலப்படுத்தியோ செய்ததாகக்கூறியுளர். அவனால் வேலூர் கோட்டை பழுதுபார்த்து ஒழுங்கு செய்யப் பட்டது. சிற்சில சமயங்களில் அதைத் தனது வாஸஸ்தானமாகக் கொள்வதற்கென்றும் சந்திரகிரிக் கோட்டையை பலப் படுத்தி அது கஜானாவை பத்திரமாக வைப்பதற்கென்றும் கூறியுளர். அவனது மகன் கிருஷ்ண தேவராயன் தனது தகப்பன் சேர்த்த நாடுகளை இன்னும் விஸ்தீரண முள்ளதாகச்செய்ததுடன் தமிழ் நாடு முழுவதையுமே ஒடுக்கினான்.

முகம்மதியர்களுடன் ஏற்பட்ட போராட்டத்தில் விஜயநகர மன்னர்களுக்கு நேசர்களாக ஏற்பட்ட பாமினி வமிசம் முகம்மத் துக்ளக் சக்கிரவர்த்தியினது கொடுமையை சகிக்கமாட்டாமல் குஜராத்திலிருந்து ஓடி வந்து விட்ட சில முகலாயர்களால் ஸ்தாபிக்கப்பட்டது. அவர்கள் தௌலதாபாத் என்ற ஊரைப்பிடித்துக்கொள்ள அவர்களைப்போலவே துக்லக் (Tughlak) சக்கிரவர்த்தியினால் கொடுமை செய்து ஓடி வரும்படி செய்யப்பட்ட இன்னும் அனேகர் உதவி செய்தார்கள். அவர்களெல்லாம் ஒருங்கு கூடி இஸ்மேல் கான் என்ற ஒரு ஆப்கானியனைத் தங்களது தலைவனைத் தெரிந்தெடுத்துக் கொண்டார்கள். இந்த இஸ்மேல் கான் என்றவனும் சுவல்பகாலத்திற்கெல்லாம் தனது அதிகாரத்தை விஜயநகர மன்னனது நேசனாகிய ஹஸன் கங்கூ என்றவனிடம் ஒப்புவித்து விட்டான்.

ஜாதி, மதம் இவைகளில் முற்றும் வேறுபட்டிருந்த இரண்டு ராச்சியங்கள் நெடுங்காலம் ஒற்றுமையுடன் கூடி

யிருப்பது முடியாத விஷயம். ஆதலால் இருவரும் சத்துருவாக ஏற்பட்டது நிவர்த்தியானதும் பாமினி அரசர்கள் தெலிங்கண, விஜயநகரம் இவைகளின் ஹிந்து ராஜாக்களுடன் நெடுங்காலம் சண்டையிட்டுக்கொண்டு வந்தார்கள். இதில் தெலிங்கண, முற்றிலும் ஒடுக்கி விடப்பட்டது. தென் இந்தியாவில் பாக்கி நின்ற முக்கியமான பரம்பரைகள் பாமினி வமிசமுமே, இவ்விரண்டில் விஜயநகர வமிசம் பதினைும் நூற்றாண்டுக்குள் துங்க பத்திரை நதிக்குத் தெற்கிலுள்ள தேசத்திற் கெல்லாம் முக்கிய அதிகாரம் வாய்ந்திருந்ததாக ஏற்பட்டு விட்டது. மார்ஷ்மன் (Marshman) என்ற கனவான் அவர்கள் தெற்கிலிருந்த ஹிந்து அதிபதிக்கெல்லாம் மேல் அதிபதிகளாக ஏற்பட்டிருந்ததாகக் கூறியுளர்.

இரண்டு கரை ஓரங்களிலு மிருந்த அறுபது துறைமுகப் பட்டணங்களில் நடந்த வியாபாரத்தினல் கிடைத்த லாபத்தினல் அதிகரிக்கப்பட்டவர் தங்கள் அரசிறையைக் கொண்டு சேகரிக்கப்பட்ட படை அவ்வரசனை ஒண்டியாக வேறொரு ராச்சியமுமே எதிர்த்து ஜெயமடைய முடியாதென நினைக்குமாறு செய்த பாமினி ராச்சியத்தில் நேர்ந்திருந்த குழப்பமும் மேலே கூறியுள்ளவாறு ஏற்பட்ட வாரங்கல் நாட்டின் ஐசுவரியத்திற்கு ஒரு காரணமாயிருந்தது. ஹஸன் கங்கூ இருந்த பிறகு அது நாளடைவில் ஐந்து சிறு ராச்சியங்களாகச் சிதறுண்டு போய் அவைகள் ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு அதிபதி ஏற்பட நேர்ந்தது. அவ்வதிபதிகளும் ஒருவரோடொருவர் துவேஷமும் விரோதமும் பாராட்டிச் சண்டையிட்டுக் கொண்டுவந்தார்

கள். பதினாறும் நூற்றாண்டின் மத்தியில் பாமினி வமிசத்தின் சுல்தான்கள் எனக் கூறப்பட்ட ஐந்து அதிபதிகளும் பக்கத்து ராச்சியமாகிய விஜயநகரத்தின் அதிகார அபிவிர்த்தியைக்கண்டு பயங்கவர்களாய் ஒன்றுசேர்ந்து அதை ஒடுக்கிவிடத் தீர்மானித்தார்கள். அவர்களது சைனியமும் ஒன்று கூட்டப்பட்டது. 1565-வது வருஷம் ஜனவரி மாதம் 23-ந்தேதி தென் இந்தியாவிலேயே விசேஷமான சண்டை தலைக்கோட்டை (Talikota) என்ற விடத்தில் நடந்தது. விஜயநகர ராணுவம் சிதறடிக்கப்பட்டு அதன் அரசன் ராமராயன் என்றவனும் கொல்லப்பட்டான். பிந்தி அந்த ராச்சியமும் சிதைவுண்டு போயிற்று.

ஜெயமடைந்த பாமினி வமிசத்திய சுல்தான்களும் தங்களுக்குள்ளாகவே ஏற்பட்ட பொறாமையாலும் அசூயையாலும் ஜெயித்த நாட்டைப் பிடித்துக்கொள்ள முடியாமல் போயிற்று. ஆதலால் தலைக்கோட்டைச் சண்டையினால் நேர்ந்ததெல்லாம் அதனால் சிதறுண்ட நாடு தற்காலத்தில் ஜெமீன்தாரிகள், பாளையங்கள் என்று கூறப்பட்டு ஜமீன்தாரிகள், பாளையக்காரர்கள் இவர்களது ஆதீனத்தின் கீழிருக்கும். முந்தி ராஜவமிசத்தினர்கள் சர்க்கார் அதிகாரிகள் இவர்கள் ஸ்வாதீனப்பட்டு ஆண்டுவந்திருந்த பிரிவுகளாக ஏற்பட்டதே ஒழிய வேறில்லையாம். சிதறுண்ட மேற்கூறியுள்ள பாகங்கள் ஒன்றிற்குக் கொல்லுண்ட அரசன் சகோதரன் ஒருவன் அதிபதியாக ஏற்பட்டு அனந்தபுரம் ஜில்லாவிலுள்ள பேணுகொண்டா (Penukonda) வில் சில காலமிருந்த பிறகு அவன் தனது கச்சேரியைச் சந்திரகிரிக்கு மாற்றிக் கொண்டான். இங்

கவன் 1615-வது வருஷத்தில் தங்களது பண்டகசாலையை மசூலிப் பட்டணத்திலிருந்து ஆர்மகாமுக்கு (Armagan) மாற்றிக் கொண்ட இங்கிலீஷ் காரர்களது வியாபாரம் அங்கு திருப்திகரமாகவில்லை என்ற விஷயத்தைக்கேள்வி யுற்ருன். இந்த ராஜாவின் கீழுள்ள காளஹஸ்திப் பாளை யக்காரர் மூலமாக ஆங்கிலப்பண்டக சாலை மேற்பார்வை அதிகாரியாகிய டே துரை (Mr. Day)யை சமுத்திரக்கரை வரைக்கும் விஸ்தரித்திருந்த தனது நாட்டில் வந்து தங் கும்படி கேட்டுக் கொண்டார்கள். அதற்குச் சம்மதித்த டே துரையும் இந்த அரசனை அவனது சந்திரகிரியிலிருந்த அரண்மனையில் சந்தித்துப் பேசினுர். முடிவில் 1640-வது வருஷத்தில் கரையோரமாக இங்கிலீஷ்காரர்களுக்கு ஒரு துண்டு பூமி அளிக்கப்பட்டது. முதல் முதல் இங்கிலீஷ் காரர்களுக்குச் சொந்தமாக ஏற்பட்டது அதே. பக்கத்திய அமைதியற்ற முரட்டு ஸ்வபாவம் பொருந்திய சிற்றசர்கள் எதிர்த்தால் காப்பாற்றிக் கொள்ளும் நோக்கத்துடன் அங் கவர்கள் ஒரு கோட்டையை ஏற்படுத்திக்கொண்டு அதற்கு இங்கிலாந்தின் பரம்பரை யாகப் போற்றப் பட்டுவரும் கிறிஸ்தவ பக்தர் பெயரை ஒட்டி ஸெயின்ட் ஜார்ஜுக் கோட்டை (Fort Saint George) யென்ற பெயரை இட்டார்கள்.

தலைக்கோட்டைச் சண்டையால் தென் இந்தியாவின் நன்மைக்கும் சுகத்துக்கும் மிக்க இடையூறுகள் ஏற்பட் டன. விஜயநகர மேன்மையும் ஐசுவரியமும் அதன் அரசன் இறந்ததும் அவனுடனேயே போய்விட்டன. அந்த ராச்சி யத்தின் சிறப்பும் மகிமையும் இருந்தவிடம் தெரியாமல்

போய்விட்டன. பதினைந்தாவது நூற்றாண்டின் இறுதியிலும் பதினாறும் நூற்றாண்டின் ஆரம்பத்திலும் அந்நாட்டைப் போய்ப் பார்த்திருந்தவர்கள் அதன் மகிமையும் ஐசுவரியமும் வியக்கத்தக்கவையா யிருந்தன என்று சொல்கிறார்கள். அனேக பெரிய ஐசுவரியம் வாய்ந்த நகரங்களிலிருந்து உற்பத்தியான கைத்தொழில் பொருள்கள் உலகத்தில் அதிக தூரத்திலுள்ள நாடுகளுக்கு அனுப்பப்பட்டு வரப்பட்டன. விவசாயமும் ஏராளமாக நடைபெற்று வந்தது. பற்பல துறைமுகப் பட்டணங்களிலும் பலத்த வியாபாரம் நடைபெற்று வந்தது. முரட்டு ஸ்வபாவம் வாய்ந்திருந்த நாட்டின் பற்பல சிற்றதிகாரிகளை அடக்கி வைத்துக்கொண்டு தலைவன் போனதும் நாடெங்கும் கொள்ளை முதலியன ஏற்பட்டுப் பாழடைந்து ஸதா ஏற்பட்டுக் கொண்டிருந்த சண்டையால் பயிர் செய்பவர்கள் அமைதியுடன் உழுது பயிர் செய்யவும் முடியவில்லை. பகீரதப்பிரயத்தனத்துடன் பயிர் செய்யப்பட்டு மாசூலை அடையவும் முடியவில்லை. அனேக வருஷங்களுக்குப் பிந்தித்தான் ஜமீன்தாரர்களையும், பாளையக்காரர்களையும் கட்டுக்கடங்கி நிற்கும்படி செய்யக்கூடிய அதிகாரம் ஏற்பட்டு நாடும் படிப்படியாக க்ஷேமத்திலும் ஐசுவரியத்திலும் விர்த்தியாகிக் கொண்டு வந்தது.

தலைக்கோட்டைச் சண்டைக்குப் பிறகு எழுபது வருஷகாலம் விஜயநகர ராச்சியம் க்ஷீணித்ததால் ஏற்பட்ட அனேகச் சிற்றதிபதிக்குள் சண்டையும் சச்சரவும் ஸதா ஏற்பட்டுக் கொண்டேவந்து நாட்டின் அமைதியும் க்ஷேமமும் குன்றிப் போயிருந்தன. அதற்குப் பிறகு பலம்

குன்றி ஒற்றுமையின்றிச் சண்டைச் சச்சரவுகள் செய்து கொண்டிருந்த இச்சிறு ராச்சியங்களை ஜெயிப்பது எவ்வளவு எளிதென்று பீஜப்பூர் அரசனுக்குத் தெரிந்ததும் அவன் அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய முயன்றான். பாமினி ராச்சியம் சிதறுண்டிருந்த ஐந்து பாகங்களில் ஒன்றை அவன் ஆண்டு கொண்டிருந்தான். பதினாறாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் அவன் சுயேச்சை பெற்று அது முதல் அடிக்கடி முகலாயர்களுடன் போராடிக் கொண்டுவர நேர்ந்திருந்தது. பாமினி ராச்சியம் சிதறுண்டதும் ஏற்பட்ட மற்ற ராச்சியங்களுள் ஆமத் நகரம் கோல்கொண்டா என்றவை இரண்டு. அவைகளும் பக்கத்திய பீஜப்பூர் ராச்சியத்தைப் போலவே ஒருவருக்கொருவர் அசூயை காட்டிக் கொண்டுவந்தார்களென்றதுடன் முகலாயர்களுடனும் போராடிவரும்படி நேர்ந்திருந்தது. இந்தப் பரஸ்பர அசூயையும் போராட்டமும் அவர்கள் தங்களது கவனத்தைத் தெற்கு நாடுகளில் செலுத்த இடம் கொடுக்கவில்லை. ஆதலால் மிக்கச் செழுமைவாய்ந்த பிராந்தியங்களாகிய அவைகள் பலம் பொருந்திய ஒருவனுக்கு எளிதில் வசப்படக்கூடிய நிலைமையிலிருந்தன. 1636-வது வருஷத்தில் ஷாஜகான் சக்கிரவர்த்தியின் படையெழுச்சி முடிவு பெற்ற உடன்படிக்கை ஏற்பட்ட பிறகு பீஜப்பூர் சுல்தான் தனது ராச்சியத்தைத் தெற்கில் அதிகரிக்கச் செய்ய அதிகாரமும் அவகாசமும் ஏற்பட்டது. ஆமத் நகர அதிகாரம் குலைக்கப்பட்டு பீஜப்பூர், கோல்கொண்டா மன்னர்கள் கூடியமட்டும் சுயேச்சை பெற்று அடுத்த இருபது வருஷ காலம் கர்நாடகத்தில் போர்புரிந்து

வரக்கூடிய நிலைமையில் இருந்து வந்தார்கள். அவர்கள் அப்படிப் போர்புரிந்துவந்த போதிலும் ஒத்துழையாது ஒவ்வொருவரும் தன் தன் நாட்டுக் கருகிலிருந்த பாளையக்காரர்களை ஒடுக்கத் தலைப்பட்டார்கள். இதனால் அங்கங்கிருந்த சிறு சிறு ராச்சியங்கள் இவர்களது அதிகாரத்தின் கீழ்க் கொண்டுவரப்பட்டன. வேலூர், பீஜப்பூர் அரசன் வசப்படச், சந்திரகிரி கோல்கொண்டா மன்னனால் எடுத்துக் கொள்ளப்பட்டது. இவர்களுக் கேற்பட்ட வெற்றி நாளடைவில் சக்கிரவர்த்தியின் அருமையைக் கிளப்பிற்று. ஆதலால் அவர் காலதாமதமின்றிப்பெயருக்கு மாத்திரமே தனக்குக் கீழ்ப்பட்டவர்களாக ஏற்பட்டிருந்த இவர்களது பலத்தைக் குறைக்க முயன்றார்.

1656-வது வருஷத்தில் பீஜப்பூர் சுல்தானாகிய அடில் ஷா (Adil Shah) இறந்து போனான். அவனது மகனும் அறிவீனத்தால் ஸம்பிரதாயப்படி செய்ய வேண்டிய மரியாதையைத் தான் சக்கிரவர்த்திக்குப் பட்டத்திற்கு வந்ததும் செய்யத் தவறிப் போனான். ஆதலால் ஷாஜஹான் அவன் இறந்து போனவனது நியாயமான மகன் அல்லவென்று கூறச் சக்கிரவர்த்தியின் மகன் கீழ் ஒரு முகலாய சைனியம் புறப்பட்டுச் சென்று திடீரென்று பீஜப்பூர் ராச்சியத்தை அடைந்தது. அந்த ராச்சியத்தின் படையில் பெரும்பாகம் கர்நாடகத்திலிருந்த காரணம்பற்றி விஷயம் நன்மையைத்தர தக்கதாக விருக்கவில்லை. பீஜப்பூரின் மகிமையும் அதிகாரமும் குன்றியே போயிருக்கும். ஆயினும் சமய சஞ்சீவிபோல் சக்கிரவர்த்தி சாகுந் தருவாயிலிருப்பதாகச் சமாசாரம் வந்தது. ஒளரங்கசீப்பும் கொஞ்ச

மேலும் முற்றுகையை நீக்கிச் செல்ல மனமிராமலிருந்த போதிலும், தகப்பனது ராச்சியத்தைத் தான் அடையத் திரும்பிச் சென்றுவிட நேர்ந்தது. இவ்வாறு பீஜப்பூர் அரசனுக்குத் தனது ராச்சியத்தை ஒருங்கு கூட்டி விஸ்தரிக்கச் செய்ய முப்பது வருஷ அவகாசம் ஏற்பட்டதாம்.

இனி தென் இந்தியா சரித்திரத்தில் சம்பந்தப்பட்டது மஹாராஷ்டியர்களது விஷயம். இந்த மஹாராஷ்டிர வமிசமும் சிவாஜியினது வமிசம். மல்லோஜீ பான்ஸலே என்ற குதிரைவீர அதிபதி கொள்ளையடித்து ஏராளமான பொருளைச் சேர்த்துக்கொண்டு பதினேழாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் பூனாவில் சில ஜாகீர்களையும் இன்னம் சில நாடுகளையும் ஆமத்நகர சுல்தானிடமிருந்து வாங்கிக் கொண்டான். இவன் இறந்த பிறகு இந்நாடுகள் இவனது மகன் ஷாஜிக்குக் கிடைத்தன. இந்த ஷாஜி 1636-வது வருஷத்தில் அப்பொழுது உன்னதமான பதவியிலிருந்த பீஜப்பூர் சுல்தான் கீழிருப்பது நலமெனக்கருதி அனுமதி வேண்டியது அளிக்கப்பட்டது. கர்நாடக படையெழுச்சி ஒன்றில் இந்த ஷாஜி அனுப்பப்பட்டு அதில் பிரக்கியாதிபெற்ற காரணம் பற்றி இவனுக்கு பெங்களூருக் கருகில் அனேகம் சிறந்த ஜாகீர்கள் அளிக்கப்பட்டன. இந்த ஜாகீர்கள் பூனா ஜாகீர் முதலானவைகளை விடச் சிறந்தவைகளாக விருந்ததால் இவைகளைத் தான் வைத்து அந்த ஜாகீர்களைத் தனது மகன் சிவாஜி பேருக்கு மாற்றிவிட்டான். பூனா ஜாகீருடன் தனக்கு வந்த அதிகாரத்தை சிவாஜி மிகத் துணிகரமான கொள்ளை முதலிய தீய விஷயங்களில் செலுத்தி வந்த காரணம்பற்றி ஷாஜியின் ரக்ஷகன் அவனைப்பிடித்து அவனது

மகனது நன்னடத்தைக்கு ஜாமீனாக வைத்துக்கொள்ளப் பட்டான். நான்கு வருஷகாலம் ஷாஜி பீஜப்பூரில் சிறை செய்து வைக்கப்பட்டிருந்தான். அதனால் அவனது மேன் பார்வையில்லாமல் போயிருந்த கர்நாடக ராச்சியங்கள் சீர் குலைந்து போயிருந்தது தெரிந்ததும் அவனை விடுதலை செய்து அதிகமான அதிகாரமும் அளித்து அங்கனுப்பும் படி நேர்ந்தது. அவன் 1664-வது வருஷத்தில் இறந்து போகும் முன் பெங்களூரைச்சுற்றியிருந்த ஜாகீர்களைத் தவிர்த்து நாட்டின் தென் பாகத்தில் இன்னம் அநேகம் ஜாகீர்களையும் பெற்றிருந்தான். தகப்பனார் சிறையிலிருந்த காரணம் பற்றிக் கொஞ்சம் அடங்கியிருந்த சிவாஜியும் அவர் விடுதலை செய்யப்பட்டதும் முன்போல் கொள்ளை யடித்து வட தக்ஷணத்தில் பெரும்பாகத்தில் தனது அதி காரத்தை ஏற்படுத்திக்கொண்டான். மிக்க துரிதமாக இவ னது அதிகாரம் விர்த்தியாகிக் கொண்டு வந்ததால் 1674-வது வருஷத்தில் இவன் சுயேச்சை யடைந்து ராஜபட்டம் சின்னம் முதலியன தரித்துக்கொள்ளக் கூடிய நிலைமைக்கு வந்து விட்டான்.

இதற்குப் பத்து வருஷத்திற்கு முன் இந்த சிவாஜியின் தகப்பன் ஷாஜி இறந்து போயிருந்தான். அவனது தென் னாடுகளிலிருந்த ஜாகீர்கள் சிவாஜியினது மாற்றாந் தாயின் குமாரனாகிய வெங்காஜி என்றவன் வசப்பட் டிருந்தன. அவனும் அவைகளை பீஜப்பூர் மன்னன் கீழ்ப்பட்ட மன்ன னாகவிருந்து ஆண்டு வந்தான். சிவாஜி அந்நாடுகளை வெங்-காஜியி னிடமிருந்து பிடுங்கிக் கொண்டு விடுகிறதென்ற துணிகரமான எண்ணங் கொண்டான். இந்த நோக்கத்

துடன் இவன் கோல்கொண்டா சுல்தானோடு ஒரு உடன் படிக்கை செய்து கொண்டான். அவ் வுடன்படிக்கையின் படி கோல்கொண்டா சுல்தானும் சிவாஜி பீஜப்பூருக்குக் கீழ்ப்பட்டிருந்த நாடுகளை கோல்கொண்டா அரசனுக்காக ஜெயிக்கக் கர்நாடகத்திற்குச் சென்றிருக்கும் சமயத்தில் வடக்கிலுள்ள அவனது நாடுகளைக் காத்து ஒப்புவிக்க ஒத்துக் கொண்டான். சிவாஜி கோல்கொண்டா அரசனுக்காக நாடுகளை ஜெயிக்கப்போவதாகக் கூறியது அவனுடன் நட்புக் கொள்ளக் கபடமாகக் கூறிய விஷயமே ஒழிய உண்மையான கருத்துடன் சொன்ன பேச்சல்ல. வாஸ்தவத்தில் சிவாஜியின் கருத்து தென்நாடுகளைத் தனக்காகவே ஜெயித்துக் கொள்ள வேண்டும் என்பதே.

இவ்வாறு தனது நாடுகளைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து விட்டு சிவாஜியும் 1676-வது வருஷத்தில் வெங்காஜியி னிடமிருந்து நாடுகளைப் பிடுங்கிக் கொள்ள இந்த ஜில்லாவிலுள்ள கல்லூர் கணவாயின் வழியாகக் கர்நாடகத்தில் பிரவேசித்தான். கஷ்டங்களை அனுயாசமாய்ச் சகிக்கக்கூடிய அடங்காப் பிடாரிகளெனக் கூறக்கூடியவர்க ளடங்கியுள்ள சைனியத்துடன் சிவாஜி வேலூர், செஞ்சி முதலான விடங்களிலிருந்த வெங்காஜியின் கோட்டைகளை ஒவ்வொன்றாய்ப் பிடித்துக் கொண்டு வந்தான். இதற்குள் இவன் தனது நண்பன் கோல்கொண்டா அரசனது உதவிக்காகத் துரிதமாய்ச் செல்ல நேர்ந்ததால் தான் பிடித்துக்கொண்ட இடங்களை சந்தாஜி என்றவனிடம் ஒப்புவித்து விட்டுச்சென்றான். ஆனால் இவனிடமிருந்த சைனியம் சுவல்பமாக விருந்ததால்

அவ்விடங்களை வெங்காஜி சஞுவில் திரும்பவும் தன் வசப் படுத்திக்கொண்டு விட்டான். கடைசியாக சிவாஜி அந் நாடுகளை வெங்காஜியே வைத்துக்கொண்டு அரசிறையில் பாதி தனக்குக்கொடுத்து விடுகிறதென்ற உடன்படிக்கை யும் செய்துகொண்டான்.

நாளுக்குநாள் பலத்தில் அதிகரித்துக்கொண்டு வந்த இந்த சிவாஜியை ஒடுக்க முகலாயசக்கிரவர்த்தி முயன்ருன். ஆனுல் சிவாஜியும் மிகக் கபடத்துடன் வேலைசெய்து சமா ளித்துக் கொண்டான். சிவாஜி இறந்தபிறகு ஏற்பட்டிருந்த மஹாராஷ்டிர ராச்சியத்தை இங்கிலீஷ்காரர்கள் நாளடை வில் தங்கள் வசப்படுத்திக்கொண்டார்கள். பிந்தி கர்ஞடக யுத்தம் நேர்ந்தபொழுது அதில் இங்கிலீஷ்காரர்களும், பிரெஞ்சுக்காரர்களும் தலையிட்டுக்கொள்ள பிரெஞ்சுக்காரர் கள் தோற்கடிக்கப்பட்டு இங்கிலீஷ்காரர்கள் படிப்படியாய் பலம்வாய்ந்து ராச்சியங்களைச் சேர்த்துக்கொண்டதுபோல் இந்த ஜில்லாவும் கர்ஞடக சுபேதார் அசீம்உல் உமாராவால் (Azim-ul-Umara) 1801-ம் வருஷத்தில் ஜுலை 31-ல் கொடுபட்டு அவர்கள் வசப்பட்டு அதுமுதல் அவர்களால் இப்பொழுதும் ஆளப்பட்டு வருகிறது.

## அத்தியாயம் 2

## விசேஷ இடங்கள்

வேலூர் (Vellore):—வட ஆற்காடு ஜில்லாவின் முக்கியமான ஊர்களில் ஒன்றாகிய வேலூர் ஒரு முனிஸிபல் நகரம். இதே வேலூரென்னும் பெயருள்ளதும் தென் ஆற்காடு ஜில்லா திண்டிவனம் தாலூகாவிலுள்ளது மான ஊரிலிருந்து இதைப்பிரிக்கவேண்டி அதற்கு உப்புவேலூர் என்றும் இதற்கு ராயவேலூரென்றும் பெயருண்டாயிற்று. உப்பு வேலூர் பண்டைய காலத்தில் ஒய்மாநாடு என்றும் ஏறுமாநாடு என்றும் வழங்கிவந்த தற்காலத்திய திண்டி-வனத்தை சேர்ந்தது. நல்லியக்கோடன் எனப்படும் அரசன் காலத்தில் பகைவர்கள் வந்து அவனை எதிர்க்க, அவர்களைத் தோற்கடித்தது மன்னியில், அவர்களைத் துரத்தி தனது ராஜ்யத்தை சேர்ந்த உப்பு வேலூர் என்னும் பட்டணம் வரைக்கும் சென்றான் அவ்விடத்தில் இவ்வரசனது குலதெய்வமாகிய சுப்பிரமணியரது கிருபையால் ஒரு கிணற்றிலிருந்து புஷ்பரூபமாய் மாறியிருந்த ஒரு அம்பை எடுத்துப் பகைவரின் சைன்னியத்தின் பேரில் எறிய அவை பலவாகப் பரவி அவர்களை அழித்து விட்டதாம். பின்னர் நல்லியக்கோடன் தமது ராஜதானி சென்றான். இந்த யுத்தம் நடந்த இடத்திற்கு வேலூர் என்னும் பெயர் ஏற்பட்டது. இப்படி அகப்பட்ட புஷ்பம் வேல்போல் மாறியது பற்றியே!

இவ்வூர் இந்த ஜில்லாவிலேயே இருக்கும் ஊர்களுள் பெரிதென்பதுடன் ஜில்லாவின் பிரதான நகரமுமாகும்.


இது பெருத்த தானிய வியாபாரம் நடந்துவரும் ஸ்தலம். முதல் முதல் குடியேறின இடம் இப்பொழுது ஒரு மஜரா வாக ஏற்பட்டிருக்கும் "வேலப்பாதி" என்ற ஊர், வேல மரக் காடுகளின் மத்தியில் அமைக்கப்பட் டிருந்ததால் ஏற்பட்ட காரணபெயரே வேலப்பாதி யென்ற பெயராம். வேலூருக்கும் அப்பெயர் வந்திருக்க வேண்டும். விஜயநகர மன்னர்களது துர்க்கமாக ஏற்பட்டிருந்த காரணம்பற்றி ராயவேலூர் என்றழைக்கப்பெற்ற தெனவும் கூறலாம்.

பாலாற்றிற்குத் தெற்கில் சுமார் ஒரு மைல் தூரத்தில் இந்த ஊர் பல சிறிய கிராமங்கள் அடங்கியுள்ளனவாக அமைக்கப்பட்டுளது. அதன் கிழக்குப் பாகத்தில் சிறு குன்றுகள் சில ஏற்பட்டிருக்கின்றன. அவைகள் சம தரை மட்டத்திற்கு சுமார் ஐந்நூறடி உயரம் வாய்ந்துள்ள தாக ஏற்பட்டுத் தென் கிழக்கு வடமேற்காக ஓடியுள்ளன. அவைகளின் வடமேற்கு கோடியில்தான் ராணுவஸ்தலம் ஏற்பட்டிருக்கிறது. பேட்டை என்ற சுதேசிகளிருக்கும் ஊர் அதற்கும் அங்குள்ள குன்றுகளின் அடிவாரத்திற்கும் இடையில் இருக்கிறது. இன்னும் தெற்கில் ஐரோப்பியர் களது விடுதிகள் அமைக்கப்பட் டிருக்கின்றன. அவைகள் ஊரின் மத்தியில் போகும் ஆரணி பெரிய ரஸ்தாவிலும், ஜெயிலுக்கு போகும் தொரப்பாடி ரோட்டின் இரு பக்கங் களிலும் ஏற்பட்டிருக்கின்றன.

இவ்வூர் அழகாக அமைந்த ஊரென்று சொல்லலாம். எல்லாப் பக்கங்களிலும் குன்றுகள் வாய்ந் திருப்பதுடன் அனேகம் மாந் தோப்பு, தென்னந் தோப்பு, நாரத்தை மரங்கள் பயிரிடப்பட்டுள்ள தோட்டம், திராக்ஷைத் தோட்

டம் முதலியன உள்பிரதேசங்களிலும் எல்லைப் பிரதேசங்களிலும் ஏற்பட்டிருக்கின்றன. நறுமணம் வாய்ந்துள்ள புஷ்பச் செடிகள் பயிர் செய்து புஷ்ப வியாபாரம் செய்தல் ஜனங்களின் முக்கியமான தொழில்களில் ஒன்று. ரயில் மார்க்கமாக இவைகள் ஏராளமாகச் சென்னைக்கு அனுப்பப்பட்டு வருகின்றன.

இவ்வூரில் முக்கியமானது கோட்டையும் அதற்குள்ளிருக்கும் கோவிலுமே. கோட்டையும் கோவிலும் தென் இந்தியாவில் ஏற்பட்டுள்ள சிற்ப வேலைகளில் சிறந்தது. (படம் 2). கோட்டையின் புராதன வாசல், சுற்றிச் சுற்றிப் போவதுடன் பலமான கதவுகளுடனும் ஒரு தூக்குப் பாலத்துடனும் கூடியிருந்த ஒரு ரஸ்தாவின் வழியாக ஏற்பட்டிருந்தது. ஆனால் சில வருஷங்களுக்கு முன் சுவரின் வழியாகவே ஒரு நேரான பாதை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. தெற்குப் பக்கத்தில் ஒரு காலடிப் பாதை ஏற்பட்டுளது அது அகழியை ஒரு கருங்கல் அணை மார்க்கமாய்க் கடக்க ஏற்பட்டுளது. இக்கோட்டையின் அகழியைத் தாண்ட வேறு யாதொரு மார்க்கமும் இல்லை. இந்த அகழிக்கு ஜலம் வருவது "சூரிய குண்டம்" என்ற ஒரு பெரிய குளத்திலிருந்து. ஊருக்குக் கிழக்கிலுள்ள குன்றுகளிலிருந்து வரும் ஜலம் அதை நிரப்புகிறது. இந்த அகழியில் முன் அனேகம் பெரிய முதலைகளிருந்தனவாம். ஆனால் காலக் கிரமத்தில் அவைகள் நாசமடைந்தன. கோட்டையிலிருந்து வந்த உத்தியோகஸ்தர்கள் அவைகளைச் சுட்டுக் கொன்று விட்டார்களாம். பின்னர் 1879-வது வருஷம் மார்ச்சு மாதத்தில் திரும்பவும் சில முதலைக் குட்டிகள் கொண்டுவந்து விடப்பட்டனவாம்.



(படம் 2)—வேலூர் கோட்டையும், கோவிலும்.

வேலூர்க் கோட்டையை கிருஷ்ணா நதியின் கரையிலுள்ள பத்திராசலத்து பொம்மி ரெட்டி என்றவன் கட்டி முடித்ததாக ஏற்பட்டிருக்கிறது. அவனும், திம்மி நாயுடு என்றவனும் அவ்வூரைச் சேர்ந்த யாதவ நாயுடு என்றவனது குமாரர்கள் என்றும், அவர்களது மாற்றாந் தாயின் குமாரர்களுக்கு பயந்து ஊரை விட்டு ஓடிப்போன அவர்கள் ராமேசுவரம் முதலிய புண்ணியஸ்தலங்களை தரிசித்துப் பின்னர் வேலப்பாதி என்ற இடத்தில் தங்க நேர்ந்தது. அப்பிராந்தியம் அவர்களுக்கு ரமணீயமானதென்று ஏற்பட வேலூருக்கு ஐந்து மைல் தூரத்தில் கைலாஸ பட்டணம் என்ற இடத்திலிருந்த கரிக்கால் சோழனிடம் அவர்கள் அங்கு தங்க அனுமதி பெற்று ஆடு மாடுகள் விருத்தி செய்து தனிகர்கள் ஆனார்கள். இறுதியில் ஆரணியில் தலைவனாக இருந்த ஒருவன் அவர்களை எதிர்த்தான். ஆனால் அவன் முற்றும் தோற்கடிக்கப் பட்டதால் சந்தோஷம் கொண்ட மன்னன் அந்த பொம்மி ரெட்டிக்கு அனேகம் வெகுமதிகளும், ஸவதந்திரங்களும் அளித்தான்.

இந்த பொம்மி ரெட்டி என்றவன் வேலூர்க்கோட்டையையும் கோவிலையும் கட்டிமுடித்ததாக ஏற்பட்டுள்ள கதை விசித்திர மானது. அவனுக்கு ஐந்து முலைகளுடன் கூடிய ஒரு பசு எப்படியோ கிடைத்திருந்ததாம். ஒரு நீர் ஊற்றின் மத்தியி லிருந்த புற்றில் வசித்துவந்த ஒரு ஐந்து தலை நாகத்திற்கு அது பாலூட்டினதை அவன் ஒரு சமயம் பார்த்தானாம். சிவபிரானே நாகமாய் வடிவெடுத் திருந்தாராம். அவர் பொம்மி ரெட்டிக்குக் கனவில்தோன்றி, அங்கு பூமியில் ஏதோ ஓரிடத்தில் புதைய லிருந்ததாகவும், அதை

அவன் தோண்டி எடுத்துக்கொண்டு ஒரு கோவில் கட்டி முடிக்கவேண்டு மென்றும் கூறினாராம். புதையலிருந்து அகப்பட்ட இடத்தில் ஒரு சிவலிங்கமும் இருந்தது. பொம்மி ரெட்டியும் சிவபிரான் ஆக்ஞைப்படி கோவிலும் கட்டி லிங்கஸ்தாபனமும் செய்தான்.

கோவிலின் சுவர் ஏற்படவேண்டிய விடம் பொம்மி ரெட்டிக்குக் காட்டப்பட்டதும் ஆச்சரியமான ஸம்பவமே. ஒரு சமயம் இந்த பொம்மி ரெட்டியின் நாய்களை ஒரு முயல் துரத்திக் கொண்டு ஓட அவைகள் ஓடினமார்க்கம் அந்தப் புற்றைச்சுற்றி ஏற்பட்டிருந்தது. சிவபிரானும் ஆகாசத்தி லிருந்து அசரீரியாக அவைகள் ஓடிய மார்க்கத்தை அநு சரித்துக் கோவில் சுவர்கள் ஏற்பட்டுக் கட்டப்படவேண்டு மெனக் கூறியருளினார். சரியாக ஒன்பது வருஷகாலமாய் கோவில் கட்டி முடிவுபெற்று அதில் ஜலகண்டேசுவரர் ஸ்தாபிக்கப்பட்டார். இது நேரிட்டது 1274-ல். இந்த பொம்மி ரெட்டியின் மகன் வெங்கட்ட ரெட்டி 1398-ல் கோயில் கட்டிடங்களை விர்த்தி செய்தானாம். இக் கோயிலி லுள்ள மண்டபத்தில் தாமரை தளத்தை கிளிகள் கொத்து கிற மாதிரியும் அதைச்சுற்றி அஷ்டதிக்கு பாலகர்கள் பிம்பங்களும் வெகு நேர்த்தியாய் அமைக்கப்பட் டிருக் கிறது. இம் மண்டபத்திலுள்ள தூண்களும் அபூர்வ வேலைப்பா டுள்ளன. இந்த மண்டபத்தைப் பிரித்து இங்கி லீஷ்காரர் லண்டன்மா நகருக்கு எடுத்துப்போக எத்த னித்து பின்னர் அவ்வெண்ணத்தை விட்டு விட்டனராம்.

இக் கோவிலைக் கட்டிமுடித்த சில்பியினது மகன் அவ னைத் தேடிக்கொண்டு வந்து அக்கோவில் கட்ட ஆரம்பித்த

லக்கினம் நல்ல லக்கினமல்லவெனக் கூறி ஒரு நல்ல லக்கினத்தில் அதைச்சுற்றி ஒரு கோட்டையைக் கட்ட ஏற்பாடு செய்ததாகவும் தெரிகிறது. கோட்டை கட்டி முடிவு பெற்றதும் சிவபிரான் திரும்பவும் பொம்மி ரெட்டிக்குக் கனவில் தோன்றி அக் கோட்டையை அவன் தெங்கணிக்-கோட்டை வெங்கடதேவ மகாராயனு விடம் ஒப்புவித்து விட வேண்டுமென்று கூறியதிலிருந்து அவ்வாறு செய்யப்பட்டு, "ராய வேலூர்" என்ற பெயரும் இடப்பெற்றதாம்.

பதினேழாம் நூற்றாண்டின் மத்தியில் பீஜப்பூர் சுல்தான் வேலூரைப் பிடித்துக் கொண்டான். பிறகு இந்த ஊரின் முதல் முகம்மதிய அரசன் கான் கான் என்றவன் ஏற்பட்டான். அவனுக்குப் பிறகு முஹம்மத்கான் என்றவன் சிம்மாஸனம் ஏறினான். முகம்மத்கானுக்குப் பிறகு அப்தல் கான் என்றவன் வந்தான். அவன் காலத்தில் மஹாராஷ்டிரர்கள் துகோஜிராவ் என்ற ஒருவன் கீழ் இவ்வூர்க் கோட்டையை நெடுங்காலம் முற்றுகை போட்டதாகத் தெரிகிறது. இந்தத் துகோஜி ராவ் வேலூருக்கு ஒருமைல் தூரத்திலுள்ள சேம்பாக்கம் என்ற கிராமத்தில் ஒரு கல்லிலிருந்து ரத்தம் வடிவதைக் கண்டான்! அவனுக்கேற்பட்ட கனவிலிருந்து அக்கல்லில் செல்வவிநாயகர் எழுந்தருளியிருந்ததை அறிந்து அக்கிராமத்தில் அவரது கோவில் ஒன்றைக் கட்டிவைத்தாராம். இப்பொழுது அக்கோவிலில் பூஜை முதலியன நடந்தேறிவரக் காணலாம். இந்த செல்வவிநாயகர் ஆக்ஞைப்படி இந்தத் துகோஜியும் பாலாற்றின் கரையில் இப்பொழுது பாலம் ஏற்பட்டிருக்குமிடத்திற்கருகில் ஒரு விஷ்ணுவின் ஆலயத்தையும் பிருந்தா


வனத்தையும் ஏற்படுத்திய பிறகு ஸர்ப்பயாகம் என்ற யாகத்தையும் செய்துமுடித்தனன். இவனது இச்செய்கையால் கோட்டையில் ஸர்ப்பங்கள் அதிகரித்து அவைகளால் நேர்ந்த ஹிம்ஸையைச் சகிக்க முடியாமல் அப்தல் கான் அவ்விடத்தை விட்டகன்று வேலூருக்கு மேற்கில் இரண்டரை மைல் தூரத்தில் அப்தல்லாபுர மென்ற ஊரையும் ஒரு அரண்மனையையும் ஏற்படுத்தினதாகவும், பெங்களூர்ப் பாதையின் தெற்குப் பக்கத்தில் அவைகளின் பாழ் இப்பொழுதும் காணப்படுகிறது.

கோட்டைக்குள்ளிருந்த கோவிலில் மறுபடியும் பூஜை முதலியன நடக்கும்படி துகோஜிராவ் ஏற்பாடு செய்தான். அவனுக்குப் பிறகு அவனது மகன் லிங்கோஜி பட்டத்திற்கு வர அவனை சூல்பிகர்க்கான் என்றவன் எதிர்த்து இரண்டுவருஷ காலம் கோட்டையை முற்றுகை செய்தான். இறுதியில் நூற்று ஐம்பது தங்க நாணயங்களைப் பெற்றுக் கொண்டு இந்த லிங்கோஜி கோட்டையை எதிரிக்கு விட்டு விட நேர்ந்தது. மறுபடியும் இக்கோவிலில் பூஜை நின்று போய் இருபத்தொரு வருஷங்களுக்குப் பிறகு ஸ்ரீநிவாச ராவ் என்ற மஹாராஷ்டிரன் மூன்று வருஷகாலம் முற்றுகை செய்து கோட்டையைப் பிடித்துக் கொண்டதும், நடைபெற்று வந்ததாம். இந்த ஸ்ரீநிவாச ராவ் பதினேழு வருஷகாலம் ஆண்டான். பிறகு அவனது மகன் ராமராவ் என்றவன் பதின்மூன்று வருஷம் ஆண்டான். பின்னர் கி. பி. 1708-வது வருஷத்தில் டாட்கான் என்ற முகம்மதியன் டெல்லியிலிருந்து வந்து மஹாராஷ்டிரர்களை இங்கிருந்து துரத்திவிட்டான். கொஞ்சகாலத்திற் கெல்லாம்


ஆற்காடு கட்டப்பட நவாப் சாதக்உல்லாகான் வேலூரை யும், பக்கத்து நாட்டையும் தனது சகோதரன் குலாம்அலி கான் என்றவனுக்கு ஜாகிராக அளித்தான். அவனுக்குப் பிறகு பாகிர் அலி என்ற அவனது மகன் பட்டம் பெற்ற பொழுது ஏற்பட்ட ஒரு பஞ்சகாலத்தில் ஒரு லங்கர்கானு வை ஏற்பாடு செய்து அது நடைபெற்றுவர வேண்டிய பொருளும் ஏற்பாடு செய்தானும். இந்த லங்கர்கானு இப் பொழுதும் பராமரிக்கப்பட்டு வருகிறது.

திருவண்ணுமலை (Tiruvannamalai):—இவ்வூர் இதே பெயருடன் கூடிய தாலூகாவின் பிரதான நகரம். இங் குள்ள குன்று சமுத்திர மட்டத்திற்கு 2,700-அடி உயரம் வாய்ந்துள்ளது. சுற்றிலும் அனேகம் மைல் தூரத்திற்கு எடுத்துக்காட்டும் ஒரு காட்சியாகஇது ஏற்பட்டிருக்கிறது. இதன் அடிவாரத்தில்தான் பெயர்பெற்ற திருவண்ணு-மலைக் கோவில் (படம் 3, 4) ஏற்பட்டிருக்கிறது, இந்த ஸ்தலத்தில் தேஜோமூர்த்தி ஏற்பட்டிருப்பதாக ஐதீகம். இங்கு முக்கியமான திருவிழா நடந்தேறுவது கார்த்திகை மாதத்தில். பௌர்ணமி திதியன்று மலையின் உச்சியில் தீபம் ஏற்றப்படும். சுவாமியும் மலையைச் சுற்றி சுமார் எட்டு மைல் தூரம் ஊர்கோலம் கொண்டுவரப் படுவதும் வழக்கம். இச்சம்பந்தமான ஒரு கதையும் ஏற்பட்டுளது.

கைலயங்கிரியில் ஒரு நாள் பார்வதி தேவியார் வேடிக் கையாகச் சிவபிரானது கண்களைப்பின் பக்கமாகச் சென்று தனது கைகளால் மூடினர். உடனே எங்கு பார்த்தாலும காடாந்தகாரமாக இருள் சூழ்ந்து கொண்டு விட்டது. தேவர்களது வேண்டுகோளின்மேல் சிவபிரான் யோசனை



(படம் 3)—திருவண்ணுமலை கோவில்.



(படம் 4)—திருவண்ணாமலை கோவில்

யின்றி நடந்து எங்குமே இருள்சூழும்படி செய்ததற்காகப் பார்வதி தேவியாரைப் பூலோகத்திற்குச் சென்று தவம் புரியுமாறு கூற அவரும் காஞ்சீபுரத்தில் தவஞ் செய்து முடித்தப்பின்னர் கௌதமர் சிவபிரானைக்குறித்துத்தவம் செய்துகொண்டிருந்த இவ்விடத்திற்கு வந்தனர். அப்பொழுது சிவபிரான் அவ்வம்மைக்கு அக்நிஜ்வாலை ரூபமாகப் பிரத்தியக்ஷமான காரணம்பற்றி இவ்விடத்தில் தீபத் திருவிழா ஏற்பட்டு இந்த ஸ்தலமும் மகிமை பெற்றதாம்.

திருவண்ணாமலையி லுள்ள கோவிலின் ஆயிரக்கால் மண்டபம், இரண்டு திருக்குளங்கள், பதினொரு நிலைக் கோபுரம், தேர். மாடவீதி முதலியன கிருஷ்ணதேவராயர் என்றவரால் ஏற்படுத்தப்பட்டன. இவர் சில ஸந்நதிகளைத் தங்கமுலாமும் இட்டனராம். பதினொரு நிலைக்கோபுரம் இவரது காலத்தில் கட்டி முடிவுபெறாமல் பின்னர் தஞ்சை மாநகரில் ஆண்ட விஜயநகர ஸமஸ்தான ஆட்சியின் ஆதீனத்திற் குட்பட்டிருந்த செவ்வப்ப நாயக்கர் என்றவர் காலத்தில் (கி. பி. 1574-1575-ல்) முடிவு செய்யப்பட்டதாம். இவ் விடத்திலுள்ள கோவிலிலிருந்து விஜயநகர மன்னர் தனது ராச்சியத்தின் பிரதான நகரமாகிய விஜய நகரத்தை விட்டுச் சென்று, கீழ்திசையிலுள்ள நாடுகளை ஜெயித்து கிருஷ்ணா நதி தீரத்திலுள்ள அமராவதி என்ற நகரத்தில் துலாபார தானம் செய்த விஷயமும் காளஹஸ்தியில் நூற்றுக்கால் மண்டபம் ஏற்படுத்திய விஷயமும் தெரிகின்றன.

இது அருணகிரிநாதரெனப்படும் மஹானது ஜன்ம ஸ்தலம். இவரே சுப்பிரமண்ணியர் மீது திருப்புகழ் பாடி-

னவர். முத்தம்மை என்னும் மாதுக்கு இவ்வூரி லுள்ள அருணகிரிநாதரின் அருளால் பிறந்த அருணகிரிநாதருக்கு ஈஸ்வர அனுகிரகத்தினால் மகிமை உண்டாயிற்று. தான் பால்யத்தில் செய்த குற்றங்களை நினைத்து நினைத்து நொந்து ஆண்டவன் சந்நிதியில் முறையிட்டனர். பின்னர் பல ஸ்தலங்களை தரிசிக்கச் சென்றனர். இப்படியாகச் சென்று பின்னர் திருவண்ணாமலையை அடைந்து திருச்செந்தூரிலும் திருப்பரங்குன்றத்திலும் தான் கண்ட அதிசயங்களை இவ்விடத்தில் காண வேண்ட அந்தப்படி தன்னுடைய பிரார்த்தனை நிறைவேறாததின் நிமித்தம் கோபுரத்தின் மேலேறிக் கீழேவிழுந்து உயிர் துறக்க எத்தனிக்கையில் சுப்பிரமணியர் இவருக்கு பிரத்தியக்ஷ மானார். அச்சமயம் இந்நாட்டை ஆண்ட பிரபுடதேவன் இவரை அலக்ஷியம் செய்யவே தன்னுடைய யோகபலத்தால் கிளி உருவெடுத்து அவ்வரசனுக்கு நேரிட்ட ரோகத்தைத் தீர்த்தனராம்! ஆனது பற்றியே இப்பொழுதும் கிளி உருவமாய் இவர் இவ்விடத்தில் முருகனைத் தரிசிப்பதாக ஐதீகம். இவரது திருப்புகழ் வெகு அழகான நூல்.

1753-வது வருஷத்தில் இவ்விடம் மூர்த்திஸ் அலிக்கான் என்றவனாலும் மொராரி ராவ் என்ற மஹாராஷ்டிரத் தலைவனாலும் முற்றுகை செய்யப்பட்ட பொழுது கர்நாடக நவாப்புக்காக பார்க்கத் உல்லா கான் என்றவன் மிக்க சௌகரியத்துடன் இதைப் பாதுகாத்த விஷயம் சரித்திர சம்பந்தமான விஷயம். 1757-வது வருஷத்தில் பிரெஞ்சுக்காரர்களது வரவினால் ராணுவம் இவ்விடத்தை விட்டு அகன்று விட்டதாயும் 1790-வது வருஷத்தில்

திப்பு இதைப் பிடித்துக் கொண்டதாயும் சரித்திரங்களில் ஏற்பட்டிருக்கிறது.

சோளிங்கபுரம் (Sholingur):—வட ஆற்காடு ஜில்லாவின் முக்கியமான நகரங்களில் ஒன்று சோளங்கிபுரம். ஊருக்கு எட்டு மைல் தூரத்தில் பாணுவர மெனப்படும் இடத்தில் ஏற்படுத்தப்பட்டுளது சோளிங்கபுரம் ரயில்வே ஸ்டேஷன்.

இவ்வூருக்கு ஏற்பட்ட சோழலிங்கபுரம் என்ற ஆதிப் பெயரைச் சுருக்கிச் சோளிங்கபுரம் என்று அழைத்து வருகிறார்கள். ஒருகாலத்தில் சோழமன்னன் ஒருவன் இங்கொரு சுயம்பு லிங்க மிருக்கக்கண்டு, அதற்கொரு கோவில் கட்டி அக்கோவிலுக்கு சோழேசுவரர் கோவில் என்ற பெயரை இட்டனன். அதுவும் ஊரின் மத்தியில் இருக்கக் காணலாம்.

இங்குதான் முதல்முதல் தோற்றுப்போன ஆதொண்டை மன்னனுக்குக் குரும்பர்களுடன் மறுபடியும் சண்டை துவக்கும்படி கன வேற்பட்டதாம். சோளிங்கபுரம் ஒரு பெரிய ஊர் என்றதுடன் ஜனங்களுள் பெரும்பான்மையோர் வியாபாரிகள், நெசவுக்காரர்கள், வாணியர்கள் முதலானவர்களே. பிரதிதினமும் கடைகளில் நல்ல வியாபாரம் நடந்தேறுவதுடன் வாரச் சந்தைகளில் நல்ல வியாபாரம் நடை பெறும். இவ்வூருக்கு மஹிமை முக்கியமாய்க் கோவில் ஏற்பட்டதால் தான்.

இச்சோழேசுவரர் கோவிலைத் தவிர பக்தவத்ஸல. கோவில் என்ற இன்னொரு கோவிலும் இவ்வூரிலிருக்கிறது. இது விஜயநகர மன்னர் ஒருவரால் கட்டப்பட் டிருக்க

லாம். வேலூர், விரிஞ்சிபுரம் இவ்விடங்களிலுள்ள மண்டபத்தை ஞாபகத்திற்குக் கொண்டுவரக்கூடிய நேர்த்தியான மண்டபம் இக்கட்டிடத்திற்கு முன்பாகக் கட்ட ஏற்பாடு செய்யப்பட்டது. அஸ்திவாரத்துடன் முடிவு பெறாமல் நின்றுவிட்டது. ஏராளமான கொத்து செதுக்கு வேலை செய்யப்பட்டுள்ள கல்தூண்கள் பூமியில் புதைந்து கிடப்பதைக் காணலாம்.

இன்னும் இதர முக்கியமான கோவில்கள் ஊருக்கு வெளியே ஏற்பட்டுள்ளன. அவைகளுள் அதிக முக்கியமானது ஒரு உன்னதமான குன்றின் சிகரத்தில் கட்டப்பட்டுள்ள நரசிம்மசுவாமி கோவில். ராயோஜியினால் கட்டப்பட்ட படிகளை ஏறி உச்சியை அடைந்ததும், அங்கு மிக்க குளிர்ச்சி பொருந்திய நல்ல காற்று வீசி ஆரோக்கியமாக இருக்கக்காணலாம். தவிரவும் அங்கிருந்து பார்த்தால் நேர்த்தியான குளங்களுடன் கூடிப் பயிர் செய்யப்பட்டுள்ள சமவெளியின் காட்சியும் தென்படும்.

திருப்பதி, காஞ்சீபுரம் இவ்விடங் களுக்குப் போகும் யாத்திரீகர்கள் இரண்டு மூன்று தினங்கள் இவ்வூரில் தங்கியிருந்து இங்குள்ள கோவிலில் சுவாமி தரிசனம் செய்து போகிறார்கள். சித்திரை மாதத்தில் இந்த சுவாமிக்கு ஒரு உற்சவம் நடைபெறும். இங்குள்ள குன்று பைரவேசுவரரது கட்டளையின் மேல் சமவெளியிலிருந்து கிளம்பி மேன் மேலும் உயர்ந்து கொண்டே வந்ததைக்கண்ட தேவேந்திரன் கோபம்கொண்டு பலராமரை அதை நிறுத்தும்படி கேட்க அவரும் அதை அழுத்தினராம். அதன் பிறகு இப்பொழு திருக்கும் மட்டத்திலேயே நின்று

விட்டதாம்! இதன் அருகில் பதினுன்கு புண்ணிய சிகரங்களிருப்பதாகக் கூறப்பட்டிருக்கினும் மிகச் சிறந்தது இச் சிகரமேயாம்.

ராயோஜிப் படிகளின் அருகில் அவரால் ஏற்படுத்தப் பட்டுள்ள அன்னதான சத்திரம் ஒன்றுளது. முதலில் அவர் அந்த தர்மகைங்கரியம் நிறைவேறிவர பூமிமானியம் விட்டிருந்ததைக் கம்பெனியார் எடுத்துக் கொண்டு பிரதி வருஷமும் 1280-ரூபாய் கொடுத்து வந்தார்கள். இப் பொழுதும் அத்தொகை லோகல் பண்டாரால் செலவிடப் பட்டுவருகிறது. யாத்திரிகர்கள் இரண்டொரு தினங்கள் தங்கினுல் அவர்களுக்கும் இங்கு சாதம் கிடைக்கும். கார்த் திகை மாதத்திய ஞாயிற்றுக்கிழமை தினங்களில் ஊரி லுள்ளவர்களுக்கு இங்கு அன்ன மளிக்கப்படும். கைங் கரியங்களுக்காக ஏற்பட் டிருக்கும் ஆள்களுள் ஒரு பூசாரி யும் உண்டு. அவன் பிரதிதினமும் இதை ஸ்தாபித்தவர் பேரால் அர்ச்சனை செய்து வருவான். அவரது ஸாலிக் கிராமங்களும் இங்கு வைக்கப்பட் டிருக்கின்றன. இச் சத்திரத்திற் கருகில் ஒரு ஆழமான கிணறு உண்டு. அதன் ஆழம் கோவில் எவ்வளவு உயரமோ அவ்வளவு என்று கூறுவதுண்டு. அதை ராயோஜி தமது பணச்செலவில் வெட்டி வைத்தாராம்.

கிழக்காகவுள்ள இன்னொரு குன்றில் கிழக்கில் ஆஞ்சநேய சுவாமி கோவில் ஒன்றுளது. பக்கத்துக் கோவிலைப் போல அவ்வளவு சிறந்ததாகக் கட்டப்பட் டிராவிடினும் மிகப் பிரக்கியாதி பெற்றது. பேய் பிடித்துள்ள ஸ்திரீகள் அதன் உபாதி நீங்க இக்கோவிலுக்குக் கொண்டு வரப்படு

வார்கள். இந்த ஆஞ்சநேயரது மகிமையால் சோளிங்க-புரத்திற்கு வருபவர்கள் இவரது ஆலயத்திற்குப் போகாமல் திரும்பிப் போவதில்லை. குன்றில் ஏறுகையில் பாதி வழியில் உள்ள ஊற்றில் ஸ்நானம் செய்துவிட்டுப் பேய்-பிடித்துள்ளவர்கள் கோவிலுக்குட் சென்று மூர்த்தியின் முன்பாக உட்காருவார்கள். பிறகு அவர்கள் தலை விரித்தாட ஆரம்பிப்பதுடன் கீழே விழுந்து புரளுவதுமுண்டு. இரண்டொரு மணி நேரம் அவர்கள் புலம்புவார்கள். பின்னர் அவர்கள்மீது புண்ணிய தீர்த்தம் தெளிக்கப்படும். அவர்களும் பிரக்ஞையற்றுக் கிடப்பார்கள். பிரக்ஞை வந்ததும் அவர்களது சாதாரண இயற்கை நிலைமையும் வந்துவிடும். பிசாசு நீங்குவதுடன் இன்னும் அனேகம் வியாதிகளும் இங்கு நீங்கி விடுமாம்! நோயாளிகள் அல்லும் பகலுமாக இரண்டொரு மாதம் இக்கோவிலிலேயே கிடந்து சுவப்நத்தில் கடவுள் அனுமதி பெற்றபிறகு தான் அங்கிருந்து அகல்வது வழக்கம்.

இச் சோளிங்கபுரத்தைச் சுற்றி அனேகம் தீர்த்தங்களும் இருக்கின்றன. அவைகளுள் முக்கியமானது பிரம தீர்த்தம் என்றது. அதில் ஜனங்கள் வியாழக்கிழமை தினங்களில் ஸ்நானம் செய்வது வழக்கம். ஒரு சமயம் பரமசிவன் பிரம்ஹாவின் ஐந்து தலைகளுள் ஒன்றைச் சேதித்துவிட அவர் இங்கு வந்து அந்தத் தலை மறுபடியும் வளரும்வரை தவம் செய்தாராம். மந்தராபுர மன்னன் இந்திரத்துயும்னன் சில ராக்ஷசர்களுடன் போர் புரிந்தபொழுது விஷ்ணு ஆஞ்சனேய சுவாமியை அவருக்கு உதவி புரியுமாறு அனுப்பினராம். பிறகு ஆஞ்ச

நேயர் ஒரு குன்றில் தோண்டி ஹநுமந்த தீர்த்தத்தை உண்டாக்கினராம்.

இன்னுமுள்ள பத்துப் பன்னிரண்டு தீர்த்தங்களைப் பற்றியும் கதைகள் ஏற்பட்டிருக்கின்றன. அவைகள் ஒன்றினருகில் வால்மீகி மஹரிஷி பல காலம் தவம்செய்த பிறகு ராமாயணத்தை எழுதும்படி கடவுளால் உத்திரவிடப்பட்டு அப்படியே செய்து முடித்தன ரென்றும் ஒரு கதையுண்டு.

1781-வது வருஷத்தில் சோளிங்கபுரத்திற் கருகில் கர்னல் கூட் ஹைதருடன் போர் புரிந்தான். அதில ஹைதர் தோல்வி யடைந்ததாகச் சரித்திரம் கூறுகிறது.

வந்தவாசி (Wandiwash) :— இவ்வூர் இப் பெயர் கொண்ட தாலூகாவின் பிரதான நகரம் என்றதுடன் தாசில்தார், சப் மாஜிஸ்டிரேட், போலீஸ் இன்ஸ்பெக்டர் முதலானோர்களது இருப்பிடமுமாக ஏற்பட்டுளது. வியவசாயிகளும் வர்த்தகர்களும் இங்கு அதிகம். போஸ்டாபீசும், தந்தி ஆபீசும் இங்கிருப்பதுடன், மருந்து கொடுக்கும் ஆஸ்பத்திரியும், பிரயாணிகள் தங்கும் பங்களாவும் சத்திரங்களும் உள்ள ஒரு யூனியன்.

இவ்வூருக்கு வந்தவாசி யென்ற பெயர் வந்ததின் காரணமாவது ஜயகாந்தன் என்ற பாண்டிய மன்னன் நோயினால் பீடிக்கப்பட்டு வருந்திப் பற்பல இடங்களிலுள்ள கோவில்களை தரிசித்துக் கொண்டு வந்தும் பிரயோசனம் யாதும் ஏற்படாமலிருந்து வருந்துகையில் ஒரு கனவு கண்டனன். அதில் கண்டபடி ஒரு புற்றைத் தோண்டிப் பார்க்க அதற்குள் ஒரு சிவலிங்க மிருக்கக் கண்டு

அதற்கொரு கோவில் கட்டி வைத்தனன். அதனால் நோய் நீங்கின காரணம்பற்றி அவ்விடத்திற்கு வந்தவாசி அதாவது ரோகம் வாசியாகி வந்த இடமென்ற பெயரை இட்டனராம். கல்லும்போது பாறைபட்டு நேர்ந்துள்ள குறி இப்பொழுதும் இந்த லிங்கத்தில் காணப்படும்! இவ்வூர் மத்தியிலுள்ள ஒரு சிறு குன்றின்பேரில் ஏற்பட்டிருக்கும் கோவில் விசேஷ பிரக்யாதி பெற்றது.

சரித்திர சம்பந்தமாக இவ்விடம் பெயர் பெற்றது. கர்நாடக முகம்மதியர்களது ராஜாங்கத்தில் ஏற்பட்டிருந்த முக்கியமான ராணுவ ஸ்தலங்களில் இது ஒன்றாக ஏற்பட்டிருந்தது. இப்பொழுதும் இவ்விடத்தில் அனேகம் முகம்மதியர்கள் வசித்து வருகிறார்கள். இங்குள்ள கோட்டையைக் கட்டியது மஹாராஷ்டிரர்களாக விருக்கலாம். அது பேட்டையென்று கூறப்படும் ஊருக்கு வடக்கிலிருக்கிறது. அதுவும் கூட உயரமான சுவர்களால் பந்தோபஸ்து பண்ணபட்டிருந்த தென்பதற்கு இப்பொழுதும் அடையாளங்கள் இருக்கின்றன. தென்கிழக்கு மூலையைத் தவிர மற்ற இடங்களில் இது ஒரு அகழியால் சூழப்பட்டிருக்கிறது. அம்மூலையில் பல பீரங்கிகள் ஏற்றப்பட்டு வெடிமருந்து முதலியன சேகரித்து வைக்க இடங்களும் வாய்ந்திருக்கின்றன.

கர்னாடக யுத்தத்தில் அதிகமாகச் சண்டை நடந்த இடம் இந்த வந்தவாசியே. 1752-வது வருஷத்தில் இக்கோட்டை மேஜர் லாரென்ஸ் என்றவரால் தாக்கப்பட்டது. ஆனால் அவர் மூன்று லக்ஷம் ரூபாய் விடுதலைப் பணம் பெற்றுக் கொண்டு சென்று விட்டனராம்.

1757-வது வருஷத்தில் கர்னல் ஆண்டெர்ஸன் என்றவன் ஊரை நாசப்படுத்திய போதிலும கோட்டையைப் பிடித்துக் கொள்ள முடியாமற் போயிற்று. அப்பொழுது அது பிரெஞ்சுக்காரர்களுக்கு இந்த பாகத்தில் பிரதானமான இடமாக இருந்து வந்தது. அப்பொழுது பிரெஞ்சு சைனியம் இங்கிலீஷ்காரர்களை இரு முறை துரத்தி யடித்ததாகத் தெரிகிறது. 1759-வது வருஷத்தில் பிரிட்டன் என்றவர் எதிர்த்தும் பயன் பெறவில்லையாம். சில நாட்களுக்கெல்லாம் பிரெஞ்சுப் போர் வீரர்கள் கலகம் செய்ய ஆரம்பித்ததால் சீக்கிரத்தில் அவர்கள் திருப்தி செய்யப்பட்டிருந்த போதிலும் அவ்வருஷம் முடிவு பெறுவதற்குள் அக்கோட்டை கூட் என்றவர் வசப்பட்டு விட்டது. 1760-வது வருஷத்தில் பிரெஞ்சுக்காரர்கள் லாலியின் கீழாகவும், மூவாயிரம் மஹாராஷ்டிர வீரர்கள் புஸ்ஸி என்றவரின் கீழாகவுமாக இவ்வூருக்கு முன்வந்து தோன்றினர்கள். நேரிட்ட சண்டையில் பிரெஞ்சுக்காரர்கள் தோல்வியடைந்து புஸ்ஸி சிறை செய்யப்பட்டார். இந்த ஜெயம் இங்கிலீஷ்காரர்களுக்கு மிகவும் முக்கியமானது. 1780-வது வருஷத்தில் லெப்டினெண்ட் பிலிண்ட் என்றவர் லாகவமாய் வேலை செய்து கோட்டை ஹைதர் வசப்படாமல் காப்பாற்றிக் கொண்டார். சரித்திர சம்பந்தமான இவ் விஷயங்கள் இந்து தேச சரித்திரங்களில் விவரமாகக் காணலாம்.

படைவீடு (Padaved) :—இந்தப் பாழான ஊர் இந்த ஜில்லாவில் முக்கியமான இடங்களில் ஒன்று. இப்பொழுது இதன் ஜனத்தொகை சொல்பமெனினும் ஒரு காலத்

தில் குரும்பர்களது வமிசத்திய ராஜதானிப் பிரதான நகரமாக இருந்தது. இவ்வூர் அப்பொழுது பதினாறு மைல் சுற்றளவு வாய்ந்து கோவில்களுடனும், சத்திரங்களுடனும் ஜனங்களது நேர்த்தியான வீடுகளுடனும் விளங்கிக்கொண்டிருந்தது. மண் கல் மாரியினால் இந்நகரம் மூடிவிடப்பட்டதாக நினைக்கிறார்கள். புராதன நகரமிருந்த விடம் காடடர்ந்துளது. இவ்வூரிலுள்ள கோயில்களுள் ஒன்று ரேணுகாம்பாள் கோவில். மற்றது ராமஸ்வாமி கோவில். ரேணுகாம்பாள் கோவில் விசேஷமானது. ஆடி வெள்ளிக் கிழமை தினங்களில் ஏராளமான ஜனங்கள் இக்கோவிலுக்கு வருவது வழக்கம். இந்த ரேணுகாம்பாள் ரைவத ராஜன் என்ற மன்னனின் குமாரி. அவள் தனது தந்தையின் அனுமதியின்மேல் ஒரு சைனியத்துடன் ஒரு தக்க புருஷனை நாடிச் செல்லுகையில் இப்படைவீட்டுக் குன்றுகளுக்கு வடக்கில் தங்கினாள். அப்பொழுது ஒரு அசரீரி வாக்கு அக்காட்டில் நதிக்கருகில் வசித்துக் கொண்டிருந்த ஜமதக்நி ரிஷியே அவளுக்குத் தக்க புருஷனெனக் கூறிற்றாம். சைனியத்துடனும் மாந்திரீகத்தில் சாமார்த்தியம் வாய்ந்திருந்த சாமுண்டி யென்ற சேடியுடனும் அவரைத் தேடிக் கொண்டு சென்றாள் அவ்வரச குமாரியும். இவர்களது வரவால் கோபம் கொண்ட ஜமதக்நியும் தனது மந்திர சக்தியால் சைனியங்களை சிருஷ்டித்தனுப்ப அவைகளைச் சாமுண்டி தனது நேத்திராக்நியால் தகிக்க ஆரம்பித்தாள். ஜமதக்நி ரிஷியும் எப்பொழுதும் குறையாத ஜலம் நிறைந்திருக்கும் சக்திவாய்ந்துள்ள தனது கமண்டல ஜலத்தை அவ்வக்நியை அணைக்க உபயோகிக்க அது படை-

வீடு அல்லது கமண்டல நதியாக ஏற்பட்டதாம். வெகு காலம் போராடிய பிறகும் அனேகம் படைகள் வெட்டப் பட்ட பிறகும், சாமுண்டி பிடித்துப் புஷ்பமாலையால் கரை யில் கட்டிப் போட்டுவிடப் பட்டாள். சாமுண்டேசுவரி யினது கோவில் அதே இடத்தில் கட்டப்பட்டிருக்கிறது படைகள் வெட்டுப்பட்ட காரணம்பற்றி இவ்விடம் படை வீடு என்ற பெயர் வாய்ந்ததாம்.

தான் வந்தது கலியாணம் செய்து கொள்வதற்கே ஒழியச் சண்டை போட அல்லவென்றதை உணர்ந்த ரேணு காம்பாளும் தனது சைனியத்தைத் திருப்பியழைத்துக் கொண்டு இன்பமாய் மிருதங்கம் வாசிக்க ஆரம்பித்தாள். இதைக் கேட்டு அங்கு வந்த ஜமதக்கியும் அவளைத் தொடர்ந்து சென்று அவளைக் கலியாணம் செய்து கொண்டார். இது நேர்ந்தது ஆடி மாதத்தில். ஆதலால் அந்த மாதத்திய வெள்ளிக் கிழமைகளில் விருந்து முக்கிய மாய்க் கொண்டாடப்படுவது வழக்கம்.

கொஞ்ச காலத்திற்குப் பிறகு தம்பதிகளுக்கு ஒரு புத்திரன் பிறக்க அவனுக்குப் பரசுராமனென்ற பெயரை இட்டார்கள். அக்குழந்தையும் மிக அற்புதமான குழந் தையாக ஏற்பட்டது. ரேணுகாம்பாளும் ஒரு உத்தமமான மனைவியாக ஏற்பட்டிருந்தாளாம். அவள் மஹாபதிவிரதா சிரோன்மணியாக ஏற்பட்டு ஸதா தனது புருஷனையே தெய்வமாக நினைத்துக் கொண்டிருந்த காரணம் பற்றி அவளிடம் அபாரமான அத்புத சக்தி ஏற்பட்டிருந்தது. அவள் வெறுங்கையோடு 'பத்ம ஸரஸ்' என்ற சுனைக்குப் போய்த் தனது சக்தியால் ஜலத்தையே ஒரு குடமாகச்

செய்து அதில் தனது புருஷனது கர்மானுஷ்டானத்திற்கு வேண்டிய ஜலம் கொண்டுவருவாள்! ஒரு நாள் அவள் அச்சுனைக்கு வழக்கப்படி தீர்த்தம் கொண்டுவரச் சென்ற பொழுது அங்கு ஆகாயமார்க்கமாய்ச் சென்ற மிக்க அழகுவாய்ந்த கந்தர்வன் ஒருவனைக் காண அவள் அவன் அப்படிச் சென்றதும் அவளது பதவிரத தர்மத்திற்கு பங்கம் ஏற்பட முன்போல் ஜலத்தைக் கொண்டு குடம் செய்து கொள்ள அவளால் முடியாமல் போயிற்று. இதை அறிந்த ஜமதக்நி கோபமுண்டு தனது குமாரன் பரசுராமனைக் கூப்பிட்டு அவனது தாயின் தலையை சேதிக்குமாறு கட்டளை யிட்டார். பரசுராமரும் அக்கட்டளையைச் சிரமேற் கொண்டு தனது தாயாரது தலையைச் சேதித்துப் பிதாவின் கட்டளையை நிறைவேற்றியதால் திருப்தியடைந்த ஜமதக்நியும் அவரைப்பார்த்து யாது வரம் வேண்டுமென அவர் தனது தாயார் உயிர் பெற வேண்டுமெனக் கேட்டார். ஜமதக்நியும் அவ்வாறே தனது அற்புத சக்தியால் கொஞ்சம் ஜலத்தை உபயோகித்து அவளை உயிர்ப்பித்தார்! ஆனால் பரசுராமர் தான் தனது தாயாரைக் கொல்லப் போன பொழுது தடுத்த ஒரு பறைச்சியையும் கொன்றிருந்தகால் அங்குகிடந்த முண்டங்களையும் தலைகளையும் ஒன்று சேர்த்த போது தவறுதக் தனது தாயாரின் தலையைச் சண்டாள ஸ்திரீயின் உடலுடனும் சண்டாள ஸ்திரீயின் தலையைத் தனது தாயாரின் உடலுடனும் சேர்த்துவிட்டார். உயிர்பெற்ற இரண்டு ஸ்திரீகளும் யாரைத் தனது தயாராகக் கருதுவதெனத் தெரியாது தயங்கின பரசுராமரைப் பார்த்து ஜமதக்நியும்

மானிட சரீரத்திலேயே முக்கியமானது சிரசாகையால் எந்த ஸ்திரீயின் தேகத்தில் தனது மனைவியின் தலை யிருந்ததோ அவளையே அவன் தனது தாயாராகக் கொள்ள வேண்டு மெனக் கூறினர். மற்ற ஸ்திரீக்கு மாரியம்மன் என்ற பெயர் கொடுக்கப்பட்டது. அவளும் ரேணுகாம்பாளுக்கு வேலைக்காரியாக நியமிக்கப்பட்டாள். அவளுக்குப் படைவீட்டில் ஒரு கோவில் ஏற்பட்டுளது.

சில வருஷங்கள் கழிந்ததும் கார்த்தவீர்யார்ஜுனனென்ற அரசன் இந்த ரிஷியைக் காணவர இவரும் அவனை மிகவும் சிறப்பாய் உபசரித்தார். இந்த ரிஷியிடமிருந்த சகலத்தையும் கொடுக்க வல்லமை பொருந்தியுள்ள காமதேனு என்ற சுவர்க்கலோகத்துப் பசுவைக்கண்டு அதைத் தனக்குத் தரும்படி பிரார்த்தித்த அரசனது வேண்டுகோளுக்கு இணங்காததால் அந்த ரிஷியின் மேல் கோபம் கொண்ட அவ்வரசனும் அவரது தலையை வெட்டிவிட்டான். பின்னர் தனது புருஷனுடன் உடன்கட்டை ஏறப்போன ரேணுகாம்பாளை அவ்வாறு செய்யாமல் தடுக்கத் தேவர்கள் மழை பொழியும்படி செய்ய ரேணுகாம்பாளும் தேக மெல்லாம் ரணங்களுடன் கூடியவளாய் ஜதையிலிருந்து இறங்கித் தனது குமாரன் பரசுராமனை நினைத்தாள். அவனும் உடனே அங்குவந்து தேவதைகளின்மேல் கோபம் கொள்ள அத்தேவர்களும் தங்கள் மீது தவறில்லை யென்றும், அந்த ரேணுகாம்பாளது மகிமையை அதிகரிக்கச் செய்யவே தாங்கள் மழையைப் பொழியச் செய்த தெனவும் கூறி அவனைச் சமாதானப் படுத்தினர்கள். இந்த ரேணுகாம்பாளே இப்பொழுது

மஹா மாரி அம்மன் என்று ஜனங்களால் பூஜிக்கப்படும் தேவதையாம். பெரியம்மை வந்தவர்களின் மீது இந்த அம்மன் வந்திருப்பதாகவும் அந்த அம்மைக் கொப்புளங்கள் சொஸ்தமாக வேப்பிலை ஒன்றேதான் மருந்தென்றும் கூறுகிறார்கள். இந்த அம்மனுடைய சிலை தலை மட்டுமே யுள்ளது. ஏனெனில் இந்த அம்மனது தேகத்தின் முண்டம் ஒரு பரஸ்திரீயினது தேகத்தின் முண்டமென்ற காரணம்பற்றியே போலும் இச்சம்பவங்கள் நேர்ந்த காலத்தில் படை வீட்டில் ஊரும் ஏற்பட்டிருக்க வில்லை. யாதொரு கோவிலும் ஏற்பட்டிருக்கவில்லை.

அயோத்தி சூரிய வமிச அரசர்களில் ஒருவனாகிய வீரஸ்வான் என்றவன் தான் இவ்வூரையும் கோவில்களையும் கட்டி வைத்தனனாம். ஒரு அரக்கனால் பீடிக்கப்பட்ட இவ்வரச குமாரன் வசிஷ்ட மகரிஷியை அணுகித் தான் யாதொரு இடையூறுமின்றித் தவம்செய்ய ஓரிடத்தைக் காட்டும்படி வேண்டிக்கொள்ள வசிஷ்டரும் இப்படை வீட்டின் சரித்திரத்தை எடுத்துக்கூறி அங்கு செல்லலாமெனத் தெரிவிக்க அவனும் அங்கு வந்து தங்கினனாம். அவனுக்குப்பிறகு அவனது மகன் ஹரிஹரனும் பேரன் ஹேமமாலி யென்றவனும் அங்கு மிகச்சிறப்புடன் ஆண்டிருந்தார்கள். இந்நகரம் அழிந்து போனதற்குக் காரணம் ஹனுமாரது சாபமேயாம்.

ராம ராவண யுத்தம் நடந்தபொழுது ராவணன் பிரார்த்தித்துக் கொண்டதால் இப்படைவீட்டுத் தேவி அவனது உயிரைப் பத்மஸரஸில் புஷ்பித்திருந்த ஒரு தாமரை மலரில் வைத்து அவனுக்கு உதவி புரிந்தாள். அம்

மலைரைக் கொண்டுபோக ஹனுமார் முயன்றபொழுது அந்த தேவி தடுத்து அவரைச் சபித்ததால் அவருக்குக் கோபம் உண்டாயிற்று. ஆதலால் அவரும் அந்நகரம் அழிந்து போகக்கடவதென்று பிரதி சாபம் இட்டார். அவ்வம்மன் ஸ்ரீராமரிடம் விஷயங்களை முறையிட்டுக்கொண்டதன் மேல் அவள் ராவணனைத் தன்னிடம் ஒப்புவித்தால் சாபத்தின் உக்கிரத்தைக் குறைப்பதாகக் கூறினார். அப்படி மாற்றப் பட்ட சாபம் இந்தப்படைவீடு பத்தாயிரம் வருஷம் அழி படாமலிருந்து பாவியாயும் துன்மார்க்கனாயுமிருந்த நந்தன் என்ற அரசன் ஆள வந்ததுமே க்ஷீணிக்கத் தலைப் படும் என்றதே. அவ்வரசனது துர்நடத்தையின் காரண மாக அவ்வூர் மண்மாரியினால் நாசப்படுத்தப் பட்டதாம். ஸ்ரீராமரும் இந்த ஊர் தேவதையின் பக்கம் அமர்ந் திருக்குமாறு ஏற்பட்டு இவருக்கு ஒரு கோவில் கட்டப் பட்டுளது. ஸ்ரீராமரது அறிகுறியாக 'ஸ்ரீராம தீர்த்தம்' என்ற ஒரு புண்ணிய தீர்த்தமும் இங்குளது.

துன்மார்க்க அரசனாகிய நந்தனைப்பற்றி அனேகம் கதைகள் ஏற்பட்டிருக்கின்றன. நந்தன்படைவீடென்ற பெயர் இதற்கு அவனாலேயே ஏற்பட்டதாம். உத்தூங்க ராஜனென்றவனது மகனாகிய இவன் மிகக் கொடியவனும் கெட்டவனுமாகவிருந்தான். குரும்பர்களது ஜெயத்திற் குப்பிறகு இவன் பக்கத்திலுள்ள அரசனாகப் படை வீட் டில் ஏற்படுத்தப்பட் டிருக்கினும் இருக்கலாம். உத்தூங்க னும் பிரக்கியாதி பெற்ற குலோத்துங்க சோழ மன்னனே யாம். வேலூர்த் தாலூகாவிலுள்ள விரிஞ்சிபுரத்துச் சிலா லிகிதங்களி லிருந்தும், படை வீட்டிலேயே ஏற்பட்டுள்ள

சிலாலிகிதங்களி லிருந்தும் இப்படை வீடு தொண்டை மண்டல நாட்டில் சேர்ந்திருந்ததென்ற விஷயம் ஏற்படு கிறது.

தக்கோலம் (Takkolam) :—தக்கோலம் அரக்கோணத்திலிருந்து செங்கற்பட்டு செல்லும் தென் இந்தியக் கிளை இருப்புப்பாதையில் ஒரு ரயில் ஸ்டேஷன். இது அரக்-கோணத்திற்கு ஏழு மைல் தென் கிழக்கிலுள்ளது. இவ் வூருக்குப் புராணங்களில் "ஊறல்" என்றும் "நந்தி தீர்த்தம்" என்றும் பெயர். இவ்விடத்திலுள்ள நந்தி தேவரின் வாயிலிருந்து அகோராத்திரம் ஜலம் பெருகுவது ஒரு விசேஷம்! ஆனது பற்றித்தான் இதற்குத் திரு ஊறலெனப் பெயருண்டாயிற்று. பெரிய புராணம் இதைப்பற்றிப் பின்வருமாறு கூறுகிறது :—

"நீறுசேர்திரு மேனியர் நிலாத்திகழ் முடிமேல்
மாறில்கங்கைதா னவர்க்குமஞ் சனந்தர வணங்கே
ஊறுநீர் வருமொளிமலர்க் கலிகைமா நகரை
வேறுதன்பெரு வைப்பென விளங்குமா முல்லே"

இந்த க்ஷேத்திரம் விருத்தக்ஷீர நதி எனப்படும் குசஸ்-தலே நதியின் கரையிலுள்ளது. இவ்விடத்தில் தான் சுரர் குருவுக் கிளைய முனிவனை சம்வர்த்த ரிஷி ஈஸ்வரனைப் பூஜித்து அருள் பெற்றனராம்.

முன்னர் இது தொண்டை மண்டலத்தைச் சேர்ந்த மணயில் கோட்டத்து பங்மா நாட்டைச் சேர்ந்திருந்தது இவ்விடத்தில் தான் கி. பி. 949 (சகம் 871)யில் இந்த தேசத்தைத் தென் ஆற்காடு ஜில்லாவிலுள்ள ராஜாத்திய புரமெனப்படும் திருநாமநல்லூரிலிருந்து கொண்டு ஆண்ட

முதலாவது பராந்தக சோழன் மகன் ராஜாதித்தன் ராஷ்டிர கூட மன்னனுகிய மூன்றுவது கிருஷ்ணனுல் தோற்கடிக்கப்பட்டான். பராந்தகன் தெற்கே மதுரை, இலங்கை இவ்விடங்களில் தனது சைன்னியத்தை நடத்திக் கொண்டு அந்த இடங்களை பிடித்துக் கொண்டிருக்கையில் மூன்றுவது கிருஷ்ணன் தனக்குள் கங்க தேசத்தை ஆண்ட பூதுங்கனைக்கொண்டு இந்த தக்கோலச்சண்டையில் ராஜா-தித்தனைத் தோற்கடித்தது மன்னியில் அச்சமயம் ராஜா-தித்தன் யானையின் மேலிருந்தபடியே இறந்ததால் அவனுக்கு "யானைமேல் தூங்கினவன்" எனப்பெயருண்டாயிற்று. இந்த சண்டையில் ஜயம் பெற்றதைக்கொண்டே கிருஷ்ண ராஜாவும் "கச்சியும் தஞ்சையும் கொண்ட கன்னர தேவர்" எனப்பட்டப் பெயர்கொண்டு கி. பி. 945 முதல் 970-வரையில் காஞ்சிமா நகரை ஆண்டான். ராஜாதித்தன் இச்சண்டையின் முன்னர் திருநாமநல்லூரில் மலையாள தேசத்திய ஜனங்களைக்கொண்டு பெரிய சைன்னியத்தை வைத்துப் பரிபாலித்து வந்தனனும்.

Standard Press. Triplicane, Madras.